# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA.

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

Telephone: No. 300

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

87-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1962-ம் ஆண்டு பங்குனிமாதம் 25-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை — பிரதிசதம் 12 | 12-ம் இலக்கம்


# திருச்சபையின் கருமமொழி

## லத்தீன் மொழியே!

குருத்துவக் கல்விபெறும் மாணவர்யாவரும் லத்தீன்மொழியிலேயே கற்கவேண்டுமென, குருமட சர்வகலாசாலைப் பரிபாலன திருச்சங்கத்திற்கு அனுப்பிய கட்டளையில் பரிசுத்தபிதா குறிப்பிட்டிருக்கிறார். இந்த ஒழுங்குப்பிரமாணங்களை நுணுக்கமாகக் குருமடங்களில் அனுட்டிக்கும்படி மேற்றிராணிமாரையும் சந்நியாச சபைத் தலைவர்களையும் கேட்டிருக்கிறார்.

"புதுமையில் ஆசைகொண்டு" படிப்பித்தலிலும், திருவழிபாட்டிலும் லத்தீன் மொழி உபயோகிப்பதற்குமாறாக, தமது அதிகாரத்துக்குட்பட்ட எவராவது எழுத இடங்கொடுக்கக்கூடாதென இவ்வதிபர்களை எச்சரித்திருக்கிறார்.

எந்த நாட்டிலாவது, தேசிய கல்வியுடன் இணைப்பதற்காகக் குருத்துவகல்வியில் லத்தீன் உபயோகத்தைக் கைவிட்டிருந்தால், அதற்குரிய இடம் லத்தீனுக்கே கொடுபடவேண்டும்.

காலவசதியின்மையால் லத்தீன் தரத்தைக் குறைத்திருந்தால், படிப்பை நீடித்தல்வேண்டும். பிரதான பாடங்களை லத்தீன் மொழியில் படிப்பிக்க முடியாதவர்கள் வேறுதொண்டில் ஈடுபடவேண்டும். மொழிவிடயத்தில் ஆசிரியருக்கும் குருத்துவ மாணவருக்கும் சிக்கல் ஏற்படுமிடத்து, மேற்றிராணிமாரும் சந்நியாச சபையதிபர்களும் திடமாய் அதனைத் தீர்த்துவைக்கவேண்டும்.

லத்தீனிலும் கிரேக்க மொழியிலும் நிபுணர்களானவரைக் கொண்டதோர் கலைமன்றம் நிறுவும்படி ஷ சங்கத்துக்கு அதிகாரமளித்திருக்கிறார் பாப்பரசர். இக்கழகம் லத்தீன் மொழியை விருத்திசெய்து, புதுச்சொற்களைப் பெருக்கும். லத்தீன் மொழிப் பாடவிதானமொன்றை அமைக்கும். இவ்வேற்பாடுகளில் மாற்றஞ் செய்வதை ஷ திருச்சங்கம் அனுமதிக்கவேண்டும்.

ரோமை ஏகாதிபத்தியத்தில் ஏராளமான மக்களை ஒன்றுபடுத்திய லத்தின் மொழி, திருச்சபையின் ஆட்சிமொழியானமை தெய்வாதீனச் செயலேயாகும். ஐரோப்பிய கிறிஸ்துவ மக்களை ஒன்றுபடுத்தியதும் இம்மொழியேயாகும்.

லத்தீன் மொழி எக்கலாசாரத்தையும் வளர்த்து எவருக்கும் ஏற்புடைத்தாய், கருத்துத் தெளிவைத் தருவதொன்றாகும்; கடவுள் வெளிப்படுத்திய உண்மைகளையும், திருச்சட்டங்களையும் கூறுவதற்கேற்ற மொழி; இம்மொழி மூலம் பரிசுத்த ஸ்தானம் தனது பிரகடனங்களைத் தெளிவாகவும் துரிதமாகவும் அறிவிக்கின்றது. இது தமது பொதுத்தாயின் மொழியென உலகமக்கள் வரவேற்கின்றனர் என்பதைப் பாப்புமாரும் நிர்வாக சங்கத்தவரும் அறிவர். திருச்சபை மொழி பொதுவானதாகவும், மாறுத்தன்மையுடையதாகவுமிருக்க வேண்டுமன்றோ.

திருச்சபையின் போதனைகள் தற்கால மொழிகள்மூலம் பரப்பப்படின், வேற்றுமையடைந்து தெளிவும், நுட்பத்திறனுமற்றதாய்விடும். தற்கால உலகமொழிகளில் ஒன்றேனும் பொதுமொழியாகவோ நுட்பத்திறனுடையதாகவோ இல்லை.

இக்காலத் திருச்சபையை முற்காலத் திருச்சபையுடனும், எதிர்காலத் திருச்சபையுடனும் சித்திகரமாக இணைக்கிறதாகையால் லத்தீன் மொழியைத் திருச்சபை தொடர்ந்து உபயோகிக்கும்.

### 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் கரும மொழி

வருகிற ஐப்பசிமாதம் 11-ம் தேதி தொடங்கவிருக்கும் 2-வது வத்திக்கான் பொதுச்சங்கத்தில் லத்தீன் மொழியே கருமமொழியாக உபயோகிக்கப்படுமென்று கருதினல் பச்சி ஆண்டகையவர்கள் "உரோமன் அவதானி" என்ற பத்திரிகைக்கு அண்மையில் எழுதிய ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். ஆனல், ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தின் கூட்டங்களிலும், வேறுசர்வதேசக் கூட்டங்களிலும் நடந்துவருவது போல, பொதுச்சங்கத்தின் நிகழ்ச்சிகள்பற்றிய குறிப்புகள் இப்போது உலகத்தில் வழங்கிவரும் பிரதானபாஷைகளிலும் கொடுக்கப்ப[illegible] பார்க்கப்படுகின்றது.

## கத்தோலிக்கர்

### இரண்டாந்தரப் பிரசைகளல்லர்

"எங்கள் சேவையையும் பக்திபற்றுதலையும் வேண்டிநிற்கும் தேசியதிட்டங்களுக்கெல்லாம் நாம் திரண்டெழுந்து எமது ஆதரவை அளிப்போம். தேசிய கீதம் பாடப்படும்பொழுது நாமும் இறுமாப்புடன் எழுந்து நின்று பாடுவோம். இன, மத பேதமின்றி எமது சகோதரர்களை நாம் நேசித்தாலும் உண்மையையும் நீதியையுமே அதிகமாக நேசிக்கின்றோம். அரசாங்கம் எமது பாடசாலைகளைப் பறிமுதல் செய்ததை எதிர்த்தபடியாலும் சில பாடசாலை தனித்தியங்கும் பாடசாலைகளாக நடத்திவருவதாலும் எம்மைத் தேசத்துரோகிகள் என்றோ இரண்டாம்தரப் பிரசைகள் என்றோ கருதுதல் தவறாகும்." இவ்வாறு கண்டிமேற்றிராணியாராகிய அதிவந். லீயோ நாணயக்காரா, ஓ. எஸ். பி. ஆண்டகையவர்கள் மட்டக்களப்பு அர்ச். மிக்கேல்கல்லூரிப்பரிசளிப்புவிழாவிற்குத் தலைமைதாங்கிப் பேசியபோது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறியதாவது: "கத்தோலிக்கராகிய நாம் ஒரு சிறுபான்மைச்சமூகம் எனினும், மனிதரென்ற முறையில் எமக்கு உரிமைகளும், கடமைகளும், பொறுப்புகளும் உண்டு. கத்தோலிக்கரென்ற முறையில் நாம் பெற்றோருக்கமைந்து நடப்பது போல் முறையான தேசாதிகாரிகளுக்கும் அமைந்துநடக்க எமக்குக் கடமையுண்டென்பது உண்மையே. எனினும், எமது அமைச்சல் கண்மூடித்தனமான அமைச்சலாகவிருக்க முடியாது. பெற்றோர், தவறான அல்லது அநீதியான காரியங்களைக் கட்டளையிடும்போது அவர்களுக்கு அமைந்து நடத்தல் பாவமாகவிருக்கும். இத்தகைய அமைச்சலினத்தைப் பிரமாணிக்கவீனமென்று குறிப்பிட முடியுமா? பிள்ளையும் ஒரு மானிடப்பிறவியென்ற முறையில் பெற்றோர் பாவமான காரியங்களில் அவனுடைய அமைச்சலைக் கோரமுடியாது. இவ்வாறு எமது அடிப்படையுரிமைகளைப் பாதுகாக்க எமக்கு உரிமையும், கடமையுமுண்டு. அரசாங்கம் எமது முறையான உரிமைகளை மறுத்தால் அதன் கட்டளைகளை மீற எமக்குரிமையுண்டு. இதினிமித்தமே அரசாங்கம் எமது பாடசாலைகளைக் கைப்பற்றியதை நாமெதிர்த்தோம்.

"பலநாடுகளுக்குப் பெரும்தியாகங்கள், கஷ்டங்கள் அனுபவித்ததின் பயனாகவே சுதந்திரம் கிட்டியது. ஆனல், நாம் அவ்வளவு தூரம் கஷ்டங்களை அனுபவியாமல், சுலபமாகச் சுதந்திரத்தையடைந்தோம். இப்போது ஒரு புது இலங்கை விடிகின்றது. இதில் ஒவ்வொருவனும் தனது தொழில், வீடு, குடும்பம், சொந்தச் சௌகரியம் முதலியவற்றிற்குரிய நன்மைகளைத் தேடுவதுடன் நின்றுவிடாமல், தேசத்தின் பொதுநன்மைக்காகவும் தீவிரமாகவுழைக்க முன்வரவேண்டும். சுயபற்றை மறுத்து, பொது இலட்சியத்துக்காக, நாட்டின் முன்னேற்றத்திற்காக மாணவர்களாகிய நீங்கள் பெரும்தியாகம் செய்யவேண்டும். பாடசாலைச் சீவியம் வருங்கால சீவியத்திற்கு உங்களை ஆயத்தப்படுத்துகின்றது. ஆசிரியர்களுக்கு ஒரு வார்த்தை கூறவிரும்புகின்றேன். உங்கள் மாணாக்கரைத் தியாக வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துவதற்கு முந்தமுந்த உங்களிடத்தில் இந்தத்தியாக வாழ்க்கை பிரதிபலிக்கச் செய்வீர்களாக."

### திருவழிபாட்டு ஆயத்தக்குழுவின் புதுத் தலைவர்

அண்மையில் திருச்சடங்குகளின் சங்கத்திற்குத் தலைவராகப் பரிசுத்த பாப்பரசரால் நியமிக்கப்பெற்ற மகாமேன்மைதங்கிய கருதினல் "லாருவோனு" ஆண்டகை அவர்கள் வத்திக்கான் பொதுச் சங்கத்திற்கு ஆயத்தம் செய்யும் குழுக்களுள் ஒன்றாகிய திருவழிபாட்டுக் குழுவுக்குத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். இப்பதவி கருதினல் "கயித்தானோ" சிக்கொஞ்ஞானி ஆண்டகை அவர்களின் மரணத்தின் [illegible] இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள் தரும் செய்தி

## அக்குவைனஸ் சர்வகலாசாலைக் கல்லூரியில் பட்டமளிப்பு விழா

"பல்வேறு நாகரிகங்கள், கலாசாரங்கள், சிந்தனைக் களஞ்சியங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த அம்சங்களைக்கொண்டு ஒரு புதிய கலை அமைப்பை உருவாக்கவே நாம்முயன்று வருகின்றோம். கொன்பூச்சியஸ், புத்தர், சங்கரர், ராமானுஜர், பிளேட்டோ, அரிஸ்ரோட்டில், அகஸ்ரின், தோமையார், ஐயின்ஸ்ரைன், மறிற்றைன் இவர்கள் போன்ற சிறந்த சிந்தனைச் சிற்பிகளிடமிருந்து உண்மைக்குகந்த அம்சங்களைத் தேர்ந்தெடுக்கத் தயங்கமாட்டோம். ஆனால், தொழில்நுட்ப, விஞ்ஞான, பொறியியல் துறைகளில் முன்னேற்றமடைய முனைந்து நிற்கும் தற்கால உலகப் போக்கால் மனிதன் அமிழ்த்தப்படாவண்ணம் எமது கலையமைப்பில் ஆத்மீக அம்சங்களுக்கே முதலிடம் அளிக்கின்றோம்." இவ்வாறு அக்குவைனஸ் சர்வகலாசாலைக் கல்லூரியின் பட்டமளிப்புவிழாவின்போது அக்கலாசாலையின் அதிபரான அதி வண. பீற்றர் அல்காந்துருப்பிள்ளை, ஓ. எம். ஐ. சுவாமிகள் தமது வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டார். அவ்விழாவில் பட்டம்பெற்றோரும், அவர்களது இனசனரும், ஏராளமான பிரமுகர்களும், ஸ்தாபனத்தின் ஆதாவாளர்களும் கலந்துகொண்டனர். கொழும்பு அதிமேற்றிராணியாரான மகாவந். தோமஸ் கூறே ஆண்டகை அவர்கள் விழாவுக்குத் தலைமைதாங்கிப் பட்டம்பெற்றோருக்கு அத்தாட்சிப் பத்திரங்களையும் வழங்கினார்.

அதிபர்சுவாமியார் தமதுவருடாந்த அறிக்கையில், அக்குவைனஸ் கல்லூரி லண்டன் சர்வகலாசாலைப் பட்டப்பரீட்சைகளில் பெற்றசித்திகளையும், அண்மையில் கலாசாலையில் நிறுவப்பட்ட ஞானஉபதேசப் பயிற்சிநிலையத்தையும், விடுதிச்சாலைகளுக்கும், விளையாட்டு மைதானத்துக்குமெனக் கலாசாலையால் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த காணியை அரசாங்கம் பலவந்தமாய் எடுத்துக்கொண்டதையும்பற்றிச் சிறப்பாகக் குறிப்பிட்டார்.

பட்டமளிப்புவைபவத்தின்பின் மகாவந். அதிமேற்றிராணியார் கலைப்பகுதிக்கென அண்மையில் நிறுவப்பெற்ற புதிய கட்டிடத்தை ஆசீர்வதித்துத் திறந்துவைத்தார்.

---

### தாண்டவன்வெளிச் செய்தி

## மரியாயின் சேனை

தாண்டவன்வெளிப்பங்கில் பரி. வியாகுலமாதா தேவாலயத்தின் இடதுபக்கத்தில், குருமனையின்முன் நவமாய் அமைக்கப்பட்டிருக்கும் லூர்துகெபியில், லூர்துமாதாவின் திருநாளை இம்முறையும் வழமைபோல் இப்பங்கில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மரியாயின் சேனையினர் சிறப்பித்தனர்.

அன்று சனிவாரம் நீலவெள்ளைக் கொடிகளாலும், இயற்கைப்பூக்களாலும் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்த லூர்தன்னையின் சிறியகுகையில், பங்குக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமி அவர்களால் திவ்வியபூசை நிறைவேற்றப்பட்டது. திவ்வியபூசை வேளையில் மரியாயின்சேனையாளரால் செபங்களுடன் பாடல்களும் பாடப்பட்டன.

தொடர்ந்து இப்பங்கிலுள்ள சேனையின் ஆண்கள் பகுதியாகிய "வியாகுலமாதா பிரெசீடியத்"தில் கடந்தஇரண்டு ஆண்டுகளாகத் தொண்டாற்றி, தற்போது உத்தியோககாரணமாகச் சேனையைவிட்டுப்பிரிந்து கொழும்புக்குப்போகும் சேனைத்தலைவர் சகோதரர் எஸ். நீக்கிலஸ் அவர்களைக்கௌரவித்து அனுப்பும்படி அல்றுமாலை பங்குக்குரவர் இல்லத்தில், இப்பங்கு "சகாயமாதா பிரெசீடியம்" என்று அழைக்கப்படும் பெண்கள்பகுதிச் சேனையினரும் சேர்ந்து ஓர்தேனீர்விருந்து நடத்தினர்.

அவ்வேளை தங்கள் தலைவர்பிரியும் துக்கத்தில் காணப்பட்ட சேனையினருக்கு அவர்களை மகிழ்விக்கும்படி, பங்குக்குருவர்: "நீங்கள் தலைவரை இழக்கவில்லை; தேவதாய் உங்களைச் சோரவிடமாட்டாள். தற்போது உங்கள்பங்கினரும், தகைமைவாய்ந்தவருமான சகோதரர் என். அந்தோனிதாஸ் அவர்களையே தலைவராகத் தேவதாய் தெரிந்தெடுக்கிறாள். இப்புதியதலைவரின் உற்சாகத்துடனும், உங்கள் அயராத சேவையினாலும் நாம் கூடியசீக்கிரம் ஊறணி, 'இருதயபுரத்'தில் சேனையின் தமிழ்ப் பிரெசீடியம்ஒன்றை ஸ்தாபிப்போம்என்றும், உபதலைவராகச் சகோதரர் பி. மரியதாஸ்அவர்களும், தனாதிகாரியாகச் சகோதரர் எஸ். தவராசா அவர்களும், செயலாளராக எஸ். யோசெவ் அவர்களும் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்" என்றும்கூறி அவர்களை மகிழ்வித்தார்.

அடுத்தநாள் சகோதரர் நீக்கிலஸ் அவர்களுடன் அனைவரும் முகத்துவாரம் கடற்கரையில் ஒழுங்குசெய்யப்பட்ட இராப்போசனத்தில் பங்குபற்றி, இவ்வைபவத்தை இனிதுமுடித்தனர்.

— நிருபர்

---

### முருங்கனில் கத்தோலிக்க ஆசிரியர்கட்குத்

## தகைமைப்பத்திரம் வழங்கப்பட்டது

"இன்றைய அரசாங்கத்தின் போக்கைக் கவனிக்கும்போது எங்கள் கத்தோலிக்க சமயத்தின் வருங்காலம் நெருக்கடிமிகுந்ததாகவே தோற்றுகின்றது. பாடசாலைகள் திருச்சபையின்கரங்களிலிருந்தபோது கத்தோலிக்க சமய வளர்ச்சிக்காக நற்றொண்டாற்றிய கத்தோலிக்க ஆசிரியர் கைகளிலேயே பாடசாலைகளின் பொறுப்புக்கள் இப்போதும் ஒப்படைக்கப்பட்டிருப்பதால் ஆசிரியர்கள் தங்கள்தொண்டை மனப்பூர்வமாகவே செய்துவருவார்கள் என்ற நம்பிக்கை திருச்சபைக்கு உண்டு. அவர்களில் எவ்வித குறைக்கும் இடமில்லாதிருந்தாலும் அதை உற்சாகப்படுத்தும் நோக்கமாகவே 'மதபோதனைத் தகைமை அத்தாட்சிப்பத்திரம்' வழங்கப்படுகின்றது.

"இப்பத்திரத்தை ஆசிரியர்க்கருள வேண்டிய மகாவந். மேற்றிராணி ஆண்டவர் அவர்கள் இன்று இங்கு சமூகமளிக்கமுடியாமையால் அவர்களிடமாக நான் இப்பத்திரத்தை வழங்க வேண்டிநேர்ந்தது.

"யேசுநாதசுவாமி 'என்னையாரென்று பேசிக்கொள்கிறார்க'ளென்று ஒரு சந்தர்ப்பத்தில் தமது சீஷர்களைநோக்கிக் கேட்டபோது பல அபிப்பிராயங்களின் மத்தியிலே 'சுயஞ்சீவியான தேவனுடைய குமாரன்' என்று அர்ச். பேதுருவானவர் கூறியபோது விசுவாச உச்சாரணம் செய்துகொண்டதன் ஞாபகச்சடங்குதான் இன்றும் பச்சிளங் குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களில் சமயப்பண்பை வளர்த்துவரும் கத்தோ [illegible]

கேட்கப்படுகின்றது. திரும்பவும் யேசுநாதசுவாமி அர்ச். பேதுருவானவரைப் பார்த்து, 'மோட்சத்தின் திறவுகோலை உனக்குக் கொடுப்பேன்' என்று கூறி ஞான அதிகாரத்தை அவருக்கருளினார்.

"இவ்வதிகாரம் அர்ச். பேதுருவானவரைத் தொடர்ந்துவரும் பரிசுத்த பாப்பரசர்க்கும், மேற்றிராணிமாருக்குமே உரியதாயிருந்தாலும், உத்தம கத்தோலிக்க ஆசிரியர்களாயிருக்கையில் இவ்வதிகாரத்தில் நீங்களும் ஓரளவு பங்குபற்றுகிறீர்கள்.

"கிறிஸ்துவின் நற்செய்தியை எடுத்துரைப்பதில்—மனிதனின் கதியை எடுத்துக் காட்டுவதில் ஞானமேய்ப்பர்களுக்குப் பூரண கீழ்ப்படிவு காட்டுவீர்களெனவும் வாக்குப்பண்ணுகிறீர்கள்.

"இன்றைய கத்தோலிக்க ஆசிரியர்களின் பொறுப்பு எவ்வளவோ கஷ்டம் நிறைந்தது. அவர்கள் தங்கள் படிப்பித்தலால்மாத்திரமல்ல பேச்சாலும், செயலாலும், நடையாலும், உடையாலும் மேல்வரிச்சட்டமாய் விளங்க வேண்டியதற்கு ஆண்டவருடைய உதவி அவசியந்தேவை. அதற்காக ஒவ்வொரு கத்தோலிக்கரையும் நாளாந்தம் மன்றாடிவருமாறு தயவாய்க்கேட்டுக்கொள்ளுகிறேன்." இவ்வாறு வண. தேவராஜா சுவாமிகள் அண்மையில் ஞாயிறு பூசைப்பலியின்போது செய்த பிரசங்கத்தில் கேட்டுக்கொண்டார்.

பூசைமுடிவில் நிறைவேற்றப்பட்ட சற்பிரசாத ஆசீர்வாதத்தின்முன் முப்பதுக்குமேற்பட்ட ஆசிரியர்கள் கிறுதியினுள் விரிக்கப்பட்ட நிலபாவாடையின்மேல் முழந்தாட்படியிட்டிருக்க எழுந்தேற்றம் பண்ணப்பட்ட சற்பிரசாதநாதருக்குமுன்பாக "விசுவாசப் பிரமாணம்" எடுத்துக்கொள்ளப்பட்டபின் பரிசுத்த சுவிசேஷப் புத்தகத்திலும் தொட்டுச் சத்தியம் செய்யப்பட்டதும் ஒவ்வொருவருக்கும் வணக்கத்துக்குரிய கட்டளைக்குரவரால் தகைமைப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

சற்பிரசாத ஆசீர்வாதம் முடிந்தபின் கிறிஸ்துராஜா பாடசாலைமண்டபத்தில் தலைமை ஆசிரியர் திரு. நீக்கிலாப்பிள்ளையவர்களால் ஆசிரியர் ஆசிரியைகட்குப் பரிமாறப்பட்ட காலைப்போசன உபசரணைக்குக் கட்டளைச்சுவாமியாரும் தலைமைதாங்கி அவ்விருந்தைப் பரிமளிக்கச் செய்தார்.

— நிருபர்

---

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3870**

வலிகாமம் கிழக்குக் கமத்தொழில் கூட்டுறவு விற்பனவுச் சங்கம்.
தற்போது ஆவரங்கால் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் என்று அழைக்கப்படுவது.

— வழக்காளி

எதிராக, சிறுப்பிட்டி
1. தம்பு பொன்னம்பலமும்
2. பெண் பாக்கியமும்

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3870-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1962-ம்ஆ சித்திரைமீ 7-ந்வ (7-4-62) சனிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1363-69-ம், இதற்குத் தீர்வை ரூபா 1206-34-க்கு 1-2-61தொடக்கம் 6-9-61 வரை 100-க்கு 4 வீத வட்டியும், பின் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு 180 ரூபா 25 சதமும்.

### காணிகள் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு புத்தூர் கோயிற்பற்று சிறுப்பிட்டி இறை 'தட்டான்சீமா'வும், 'சேனாதிராயன் சீமா'வும் பரப்பு நிலலாச்சம் 16, குளி $16\frac{1}{2}$. இதற்கு எல்லை: கிழக்கு — சின்னத்தம்பிக்கும், பங்காளருக்கும் உரிய காணி. வடக்கு—சங்கரப்பிள்ளை சேதுபதிக்குரிய காணியும், ஒழுங்கையும். மேற்கு—குமாரவேலு நாகலிங்கத்துக்கும், பங்காளருக்கும் உரிய காணி. தெற்கு—குமாரவேலு நாகலிங்கத்துக்கும், மறுபேருக்கும் உரிய காணி. இது அடங்கலும் சொரியலாய் நாலில் ஒருபங்கு $K\frac{73}{45}$. இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டது.

2. மேற்படி புத்தூர் தெற்கு—இறை பச்சிகந்தா தோட்டமும் நிலமும், பரப்பு நிலலாச்சம் 8. இதில் வடக்குப்பக்கமாகப் பரப்பு நிலலாச்சம் 4. இதற்கு எல்லை: கிழக்கு—வேலுப்பிள்ளை கைம்பெண் குட்டிப்பிள்ளைக்கும், மறுபேருக்கும் உரிய காணி. வடக்கு—புத்தூர் வடக்கு ஊர். மேற்கு—மயில்வாகனம் கந்தையாவுக்கும் பெண் தெய்வானைப்பிள்ளைக்கும் உரிய காணி. தெற்கு — வைத்திலிங்கம் கந்தையாவுக்குரிய காணி. இது அடங்கலும், கிழக்கெல்லைக் காணிக்குள் இருக்கின்ற கிணற்றில் பங்கும், வழமையான வழி வாய்க்காலும். $K\frac{103}{298}$ இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது.

**சி. செ. மாரிமுத்து,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
"விதானை வளவு,"
சித்தன்கேணி, 21-2-62.

---

### அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 31-ந்திகதி சனிக்கிழமை பி. ப. 4மணிக்குச் சஞ்சுவையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். அதன்பின் பகுதித்தலைவர்கள்சங்கம் இருக்கும். எல்லாப் பகுதித்தலைவர்களும் தவறாது சமுகம்கொடுக்குமாறு வேண்டுகின்றேன்.

A. S. FRANCIS of MARY,
சபைக்கர்த்தருக்காக

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3985**

கட்டுவன்
சின்னத்தம்பி வேலுப்பிள்ளை இளையதம்பி

— வழக்காளி.

எதிராக, கட்டுவன்
1. முருகன் கைம்பெண் தெய்வி
2. முருகன் செல்லன்
3. முருகன் காத்தி
4. கறுவல் கிட்டினனும்
5. பெண் இலெட்சுமியும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3985-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுகாணியை 1962-ம்ஆ சித்திரைமீ 21-ந்வ சனிக்கிழமை (21-4-62) முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 384-ம், 25-4-61 தொடக்கம், 13-10-61 வரைக்கும் ரூபா 250-க்குப் 10வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச் செலவு 161ரூபா 10சதமும். (இதில் ரூபா 116/10 முன்செலவு. ரூபா 26/85 வெலியாத்துச்செலவு. ரூபா 18/15 பின் வரக்கூடியசெலவு.)

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி, தெல்லிப்பழை கோயிற்பற்று கட்டுவனிறை "உலக சீமாவும், பொங்கன்சீமாவும்" அல்லது "பொங்கனையன் சீமா" என்னும் காணித்துண்டுமுழுதும் நில. பர. $2\frac{1}{2}$-யும், வடலிகளும். இதற்கு எல்லை: கிழக்கு — முருகன் சரவணையின் ஆதனம். வடக்கு — வயிரவி தெய்வானையினதும், மறுபேரினதும் ஆதனம். மேற்கு — முருகன் வேலனின் ஆதனம். தெற்கு — செல்லப்பா கைம்பெண் தங்கம்மாவின் ஆதனம்.

**அ. வெற்றிவேலு,**
கொமிஷனர்.
இல. 19, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம், 19-3-62.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

## கள்ளத் தங்கநாணயம்

குறைந்தமாற்றுடன் களவிலே வார்க்கப்பட்ட தங்கநாணயங்கள் ஆங்காங்கு நடமாடுவதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. பார்வைக்குத் தரங்குறைந்த இந்தத்தங்கநாணயங்கள் உண்மையான தங்கநாணயங்களைப்போல் காணப்படுவதால் சாதாரணமாக எவராலும் அடையாளம் கண்டுபிடிக்க முடியாதென்று சொல்லப்படுகிறது.

## பரீட்சைக் குற்றங்கள்

பொதுப்பரீட்சைகள் சம்பந்தமாய்க் கல்விமந்திரி காரியாலயம் இனிமேல் கடுமையான பாதுகாப்புநடவடிக்கைகள் எடுக்கவிருக்கிறது. குற்றஞ்சுமத்தப் பட்டவர்கள்மேல் வழக்குத் தொடர்ந்து அவர்கள்குற்றவாளிகளாக நிரூபிக்கப்படுமிடத்து குற்றத்துக்குத் தக்கபடி சிறைத்தண்டனை அல்லது அபராதம் அன்றேல் இரண்டும் விதிக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் பரீட்சைக்குமுன்னரே வெளிவருவதும், பரீட்சைக்குற்றங்களும் சமீபகாலத்திலே அதிகரித்துள்ளன.

## இளைப்பாறுவதை மறுக்கலாம்

அரசாங்கஊழியர்கள் இளைப்பாறுமகாலம்வந்தும் தங்கள் விருப்பம் போல இளைப்பாறமுடியாது. இளைப்பாறும்போது அவர்களின் சேவை அரசாங்கத்துக்குத் தேவையென்று காணப்பட்டால் அவர்கள் தங்கள் எண்ணம்போல் இளைப்பாற அனுமதிக்கப்பட மாட்டார்கள். நிதிமந்திரியின் ஆலோசனைப்படியே அரசாங்கம் இவ்வாறு தீர்மானித்துள்ளது. இந்தத் தீர்மானம் 1961-ம்ஆண்டு வைகாசி 24-ந்திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகின்றது.

## புதியகட்டுப்பாடு

விடுமுறையிலே வெளிநாடுசெல்ல விரும்புகிறவர்கள்மட்டிலே நிதிமந்திரி காரியாலயம் சிலபுதியகட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அதன் புதியஉத்தரவுப்படி, சென்றஏழுவருடங்களில் வெளிநாடு சென்றிராதவருக்கு மட்டுமே இனிமேல் செலாவாணி அனுமதிக்கப்படும். இதுவரை ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை சென்றவருக்குமட்டுமே செலாவாணி அனுமதிக்கப்பட்டுவந்தது. இன்னும் வெளிநாடுசெல்ல விரும்புகிறவர்கள் செலாவாணி வழங்கப்படுமுன் வருமானவரிப் பாக்கியைக் கட்டிவிட்டதாக அத்தாட்சிப்படுத்தவேண்டும்.

## ஆசிரியரும் நீதியரசரும்

"ஆசிரியத்தொழில் உலகிலேயே சிறந்த ஒருதொழிலாகும்; தனது முன்னேற்றத்தைப்பற்றிக் கவலைப்படாது பொதுமக்களின் முன்னேற்றத்திற்கும், சுபீட்சத்திற்கும உழைப்பவனே உண்மையான ஆசிரியன்; எதிர்காலசந்ததியின் நல்வாழ்வு ஆசிரியர்களின் கையில்தான் தங்கியுள்ளது; தற்பொழுது பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளதால் சிலஆசிரியர்கள் ஆசிரியத்தொழிலில் கவனம் செலுத்தாது வேறுதொழில்களில் கவனம்செலுத்த ஆரம்பித்துள்ளனர்; ஆசிரியர்கள் தற்பொழுது அரசாங்க ஊழியர்கள் மட்டுமன்றிப் பொதுமக்களுக்கும் ஊழியர்கள்என்பதை மறந்துவிடலாகாது; எதிர்கால சந்ததியினரின் வாழ்வுவளம்பெற ஆசிரியர்கள் உழைக்கவேண்டும்" என்று தெல்லிப்பழை யூனியன்கல்லூரிப் பரிசளிப்பு விழாவில சொற்பொழிவாற்றியபோது நீதியரசர் எச். டபிள்யு. தம்பையா அவர்கள்கூறலாயினர்.

## போக்குவரத்துச் சபைச்செலவு

இலங்கைப் போக்குவரத்துச்சபையின் வரவு-செலவுத்திட்டத்திலே நிகழும் 1962-ம்ஆண்டில் வரவைக் காட்டிலும்செலவு 1கோடியே40இலட்சம்ரூபாவால் அதிகரிக்கவிருக்கிறது. சென்ற1961-ம்ஆண்டின் செலவைக் காட்டிலும் இத்தொகை ஒருகோடி ரூபா கூடுதலானது.

## வெளியேறுகின்றார்கள்

கொழும்புத்துறைமுகத்தில் வந்து தங்கிய 'கணபெரு' என்ற கப்பல் மூலம் கணிக்கத்தக்க தொகையான பிரயாணிகள் பிரித்தானிக்குப் பயணமானார்கள். இவர்களில் மிகப்பெரும்பான்மையினர் இலங்கையரே. இவர்களிலே குறைந்தபட்சம் பத்துக்குடும்பங்கள்உள்ளன. இவர்களில்அநேகர் பிரித்தானியில்போய்க் குடியேறிப் புதியஇல்லங்களை அமைத்துப் புதுவாழ்க்கை தொடக்க, அன்றேல் ஏற்கனவே அங்குபோய்க்குடியேறியுள்ள தங்கள் குடும்பத்தாருடன் சேர்ந்துகொள்ள அங்குசெல்லுகின்றார்கள்.

## அதிகாரிகளும் சுவபாஷைகளும்

"அதிகாரிகள் தங்கள்கடமையைத் திறமையாகச்செய்வதற்குத் தமிழும், சிங்களமும் தெரிந்திருக்கவேண்டியது அவசியம்; அதிகாரிகள் தமிழும்,சிங்களமும் தெரிந்திருக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கை; தமிழ்த்திறமைப் பரீட்சையில் சித்தியடையாத வித்தியாதரிசிகளின் சம்பளஉயர்வு நிறுத்தப்பட்டிருப்பதை நான்அறிவேன்; சிங்களம் அரசகருமமொழியாய் இருந்தபோதிலும்கூடச் சம்பளஉயர்வுக்குத் தமிழறிவும் இருக்கவேண்டியது அவசியம்; திறைசேரியின் தீர்ப்புக்கிணங்கவே இந்தவித்தியாதரிசிகளின் சம்பளஉயர்வு நிறுத்தப்பட்டிருக்கிறது" என்று சென்ற வியாழக்கிழமை பிற்பகல் சனப்பிரதிநிதிகள் சபையிலே கல்விமந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. வி. ரி. ஜி. கருணாரத்தின தெரிவித்திருக்கின்றார். இன்னும் 55வயதான பாடசாலைஆசிரியர்கள் கட்டாயமாகச் சிங்களம்படிக்கும்படி சட்டம்எதுவும் கட்டாயப்படுத்துவதாகத் தனக்குத் தெரியவில்லையென்றும், அவர்கள் இளைப்பாறும்வரை தொடர்ந்துஆசிரியர்களாக இருக்கலாமென்றும் கல்விமந்திரி தெரிவித்திருக்கின்றார்.

## மாணசங்கதி

நாரந்தனைவாசராயிருந்து காலஞ்சென்ற திரு. ப.சந்தியாகோ அவர்களின் பாரியாரான திருமதி எஸ். அன்னம்மா சிலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்து சென்ற13-3-62செவ்வாய்க்கிழமை இரவு தனது68-ம்வயதிலே யாழ்ப்பாணம் மத்தியூஸ்வீதியிலுள்ள தன்னுடைய இல்லத்தில் காலஞ்செல்லலாயினர். இவருக்கு இருபுத்திரரும், மூன்றுபுத்திரிகளும் உள்ளனர். நமது அச்சகத்தில் கடமையாற்றும் திரு. எஸ். சவிரிமுத்து, ஆசிரியர் எஸ். மரியாம்பிள்ளை, ஆசிரியை செல்வி யிளசம்என்பவர்கள் இவரின்மக்கள். பிரேதசேமமானது மறுநாள்சாயந்தரம் திரளானஇனசனர், சிநேகிதர் சமுகமாக வண. எஸ். ஜே. பிரான்சீஸ் சுவாமியார் அந்திமதிருச்சடங்குகளை நிறைவேற்றிக் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்கச் சிறப்பாக நடந்தேறியது. இவரை இழந்து துன்புறும் மக்கள், மருகர், பௌத்திரர் ஆகியோருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.

## சுகாதாரவாரம்

அடுத்துவரும் சித்திரைமாதம் 7-ந்திகதிமுதல் 11-ந்திகதிவரை சுகாதாரவாரமாக இவ்வருடம் அனுட்டிக்கப்படவிருக்கிறது. அகில-உலக சுகாதாரஸ்தாபனத்தின் வேண்டுகோளுக்கிசைந்து, மலேரியாத்தடை இயக்கத்தின் ஞாபகார்த்தமாகச் சித்திரைமாதம் 7-ந்திகதியன்று இலங்கை ஒருவிசேட தபால்முத்திரையை வெளியிடவிருக்கின்றது. இது 25சதம் பெறுமதியுடையதாகும்.

## இளைப்பாறும் நீதியரசர்

சுப்பிறீங்கோட்டு உபநீதியரசர்களில் ஒருவரான திரு. என். சின்னத்தம்பி அவர்கள் தம்முடைய பதவியிலிருந்து இளைப்பாறுவதற்காயத்தமாய்ச் சென்றசெவ்வாய்க்கிழமை லீவிலே சென்றிருக்கின்றார். இவர் 1950-ம் ஆண்டு கொழும்பு மாவட்டநீதிபதியாயும், 1953-ம்ஆண்டு அசைஸ் கமிஷனராகவும், 1957-ம்ஆண்டு வைகாசி மாதம் உபநீதியரசராகவும் நியமனஞ் செய்யப் பெற்றிருந்தார்.

## அரசாங்கம் எடுக்காது

வித்தியாதிபதியின் முகாமையின் கீழ் இருந்துவரும் சுமார் 350 பாடசாலைகளின் சொத்துகளை அரசாங்க உடைமைகள் ஆக்குவதற்குத் தற்போது கல்விப்பகுதி நடவடிக்கை எடுக்கமாட்டாது. இப்பாடசாலைகளை வேறு கட்டடங்களுக்குமாற்றக் கல்விப்பகுதி ஒழுங்குசெய்கிறவரை அவைகள் தற்போதைய கட்டடங்களிலேயே தொடர்ந்து நடைபெற்றுவரும். இவைகள் கோவில்வளவு, பள்ளிவாசல் ஆகியவற்றிலுள்ள பாடசாலைகளாகும்.

## துறைமுகஅபிவிருத்தி

காங்கேசன்துறைத் துறைமுகத்தை 1கோடியே 50இலட்சம்ரூபா செலவில் அபிவிருத்திசெய்ய அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இதுசம்பந்தமாய் ஆரம்பவேலைகளைக் கவனிக்கத் தொழில்-தேசியமயமந்திரி சனப்பிரதிநிதிகள்சபையிலே பத்துஇலட்சம் ரூபாவுக்கு உபமான்யப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்திருக்கிறார். சீமெந்துக் கார்ப்பறேஷன் தனதுசரக்குகளை பிறவிடங்களுக்கனுப்ப வசதியாயிருக்கும்படியாகவே இத்துறைமுகம் அபிவிருத்திசெய்யப்படவிருக்கிறது.

## மரணசங்கதி

நமதுஅச்சகத்திலே கடமையாற்றியிருந்து காலஞ்சென்ற திரு. ஜே. சைமன் அவர்களின் பாரியாரும், காலஞ்சென்ற வண. ஜே. எவ். சேவியர் சுவாமியாரின் சிறியதாயாருமான திருமதி மரியமுத்து விருத்தாப்பியநோய் கண்டிருந்து சென்ற17-ந்திகதி சனிக்கிழமைஇரவு காலஞ்செல்லலாயினர். மரிக்கும்போது இவருக்கு வயது85. திருமதி.அன்னம்மாஜேம்ஸ் இவரின் ஏகபுதல்வியாவர். நமது அச்சகத்தில் போமனாகக் கடமையாற்றும் திரு. ஜே. நிக்கலஸ், மற்றும் திரு. ஜே. யோசெவ், திரு. ஜே. மத்தியூஸ், செல்வி பிரான்சீஸ்காஎன்பவர்கள் இவரின்பௌத்திரர் பௌத்திரியாவர். பிரேதசேமமானது மறுநாள் ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் இனசனர், சிநேகிதர் பெருந்திரளாகச் சமுகமாகக் குரவர்கள்ஐவர் சமேதராய் வண. எஸ். ஜே. பிரான்சீஸ்சுவாமியார் துக்கசங்கீதம்பாடி அந்திமசடங்குகளை நிறைவேற்றிநிற்க, சிறப்பாக நடந்தேறியது. இவரைஇழந்து துன்புறும் மகள், மருகர், பௌத்திரர் ஆகியோருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.

## வெளிநாட்டுச் செய்திகள்

● தீபேத்தில் இன்னுமே பயங்கர ஆட்சி நீடிக்கின்றது. அதனால் தினமும் அங்கிருந்து அகதிகள் அயல்நாடுகளுக்குத் தப்பியோடுகிறார்கள். இதுவரை இந்தியா, சீக்கிம், பூத்தான், நேபாளமாகிய அயல் நாடுகளில் 70,000பேருக்குமேற்பட்ட தீபேத்திய அகதிகள் தஞ்சமடைந்திருக்கிறார்கள்.

● பலஸ்தீன்நாட்டை யூதர்களிடமிருந்து திரும்பவும்கைப்பற்றத் தக்கதோர் இராணுவத்திட்டத்தை ஈராய்க் பிரதமர் ஜெனறல் காசி கரீம் தயாரித்திருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது. இதனைஅவர் பாக்தாத்நகரிலுள்ள ஏனைய அராபிய நாடுகளின் தூதுவர்களுக்கு அறிவித்திருக்கிறாராம்.

● சோவியற்ருஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்குமிடையே விஞ்ஞான தொழில்நுட்பம், கல்வி, கலாசாரம் முதலியதுறைகளில் நெருங்கிய தொடர்புக்கு அடிகோலும் உடன்படிக்கையொன்றுக்குக் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இருவருடகாலம் இது நடைமுறையிலே இருந்துவரும்.

● இன்னும் கால்நூற்றாண்டுக்குள்ளாகச் சந்திரமண்டலத்தில் நிரந்தரமான குடியேற்றப்பகுதிஒன்று அமைக்கப்பட்டுவிடுமென்று அமெரிக்க உபஜனாதிபதியும், தேசியவானவெளிச் சபையின் தலைவருமான திரு. லிண்டன் ஜோன்சன் சென்றசனிக்கிழமை வாஷிங்ரனிலே கூறியிருக்கின்றார்.

● சிகறெற்புகைப்பவர்கள் சுவாசப்பைப் புற்றுநோயினால் பாதிக்கப்படுவரென்றஅறிக்கை பிரித்தானியிலே இருவாரங்களின்முன் வெளிவந்ததைத் தொடர்ந்து அவற்றைப் புகைப்பதைத் தடுக்கும் குளிசைகளைத்தயாரிப்பது ஏழுமடங்காக அதிகரித்துள்ளதென அவைகளைத்தயாரிக்கும் ஸ்தாபனம் ஒன்று அறிவித்துள்ளது.

● ருஷியா சென்றவெள்ளிக்கிழமை புதியசெயற்கைக் கிரகம் ஒன்றை வானவெளிக்கு அனுப்பியுள்ளது. இது சோவியற்வானவெளி ஆராய்ச்சித்திட்டத்தின் ஒருபகுதியாகும். இதில் மனிதர்இல்லை. இது 96 நிமிஷங்களுக்கு ஒருமுறை பூமியைச் சுற்றிவருகிறது. இதில் விஞ்ஞானக் கருவிகளும், றேடியோ அஞ்சல்கருவியும் அமைந்துள்ளன.

● இந்தியஜனாதிபதி இராசேந்திரபிரசாத்தின் பதவிகாலம் அடுத்தவைகாசி 12-ந் திகதியோடு முடிவடைகிறது. வருகிறசித்திரை 4-ந்திகதியன்று இந்தியபுதிய ஜனாதிபதித் தேர்தலில் டக்றர் ராதா கிருஷ்ணன் அப்பதவிக்குத் தெரிவுசெய்யப்படலாமென நம்பப்படுகிறது.

● தேநீர்பருகுவதானது பருத்த உடலை மெலியச்செய்து உடலின் நிறையை அதிகரிக்கவிடாது கட்டுப்படுத்துவதற்கும், தீபனத்தைக் குறைப்பதற்கும் கைகண்டஒருமருந்தென்று ஹொங்கொங்கில் வைத்தியதொண்டாற்றும் சீனவைத்திய பட்டதாரியான டக்றர்லிஷுபான் கூறுகின்றார்.

● இந்தியாவின் புதியநிதிவருடத்திலே அதன்பாதுகாப்புச்செலவு 340 கோடியே 67இலட்சம் ரூபா. அதாவது 25கோடியே 50இலட்சம் பவுணுக்குமேலாகும். இது தற்போதைய நிதிவருடப் பாதுகாப்புச்செலவிலும் 38கோடியே 74இலட்சம்ரூபா கூடியதாகும்.

● பிரித்தானியதேசத்திலே தேநீர் அருந்தும்பழக்கம் தீவிரமாக அருகிக்கொண்டுபோகிறது; அதன் இடத்தைத் தற்போது காப்பிஎடுத்துக்கொண்டுவருகிறதென்று புதியடில்லிநகரிலே பிரித்தானிய ஹைகமிஷனரின் காரியாலயத்தில் உதவித்தொழில்ஆலோசகராய் இருந்துவரும் திரு. ஜி. ஆர். டேவிஸ் தெரிவிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### பங்குனி மாதம் — 1962

| | | | | |
|---|---|---|---|---|
| 25 | ஞா. | 1 | தபசுகாலத்தின் 3-ம் ஞாயிறு (வி. ம.) | [ஊ] |
| 26 | தி. | 1 | தேவமாதா மங்களங்கேட்ட திருநாள் (காலதின ஞா.) | [வெ] |
| 27 | செ. | | காலதினம் (அர்ச். டமசீன் அருளப்பர் ஞா.) | [ஊ] |
| 28 | பு. | | காலதினம் (அர்ச். கப்பிஸ்திருனோ அருளப்பர் ஞா.) | [ஊ] |
| 29 | வி. | | காலதினம் | [ஊ] |
| 30 | வெ. | | காலதினம் | [ஊ] |
| 31 | ச. | | காலதினம் | [ஊ] |

சத்திய வேத
பாதுகாவலன்

1962-ம் ஆண்டு
பங்குனிமாதம் 25-ந்திகதி

## நவீன கொள்ளைநோய்

எமதுநாட்டிலே இன்று அமைதியில்லை. நாட்டுமக்களிடையே ஐக்கிய மனப்பான்மையில்லை மக்களின் வாழ்க்கைச்செலவு குறையவில்லை. பிழைப்பின்றித் தவிப்பாரின்தொகை குறைவதாயில்லை. பொருளாதார விருத்தியில்லை. அதனால் மனத்திருப்தியில்லை. புல்லுருவிகள்போன்றுமாக்ஸியருள் ஒருபாலார் மதத்தைத்தாக்கிச் செய்துவரும் தந்திரசூழ்ச்சிக்குக் குறைவில்லை. எங்குபார்த்தாலும் குறைசொல்வாரன்றிக் குணம்சொல்வாரில்லை, போதனையன்றிச் சாதனையில்லை.பேச்சளவிலன்றிச்செயலளவில் அதிகமாகயாதும்நடைபெறுவதாயில்லை, அரசாங்கத்தின் இன்றைய பணக்கஷ்டம் அதன்முற்போக்குச் சக்திக்கு விட்டுக்கொடுப்பதாயில்லை. "எமது முக்கியமான ஏற்றுமதிப் பொருட்களின்விலைகள் வீழ்ச்சியடைந்தமையாலே நமதுதேசியவருமானம் வீழுகையடைந்துள்ளது; நாடு பொருளாதார மந்தம்ஒன்றை எதிர்கொண்டு நடைகொள்ளுகின்றது; பொருளாதார நெருக்கடியாலே அபிவிருத்தித்திட்டங்கள் தாமதஞ்செய்யப் பட்டுள்ளன; அதனால் பொதுமக்கள் உண்மைத்தேசாபிமான உணர்ச்சிகளுடன் அரசாங்கத்துக்குத் துணைச்செய்யவேண்டிய காலம் பிறந்துள்ளது. அடுத்த பொதுத்தேர்தல்வரை எல்லோரும் தங்கள்அரசியல்வேற்றுமைகளை மறந்துவிடவேண்டும்; ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் வகுப்புவாதங்களைக் கவனிப்பதில்லை" என்றெல்லாம் சென்றதிங்கட்கிழமை போக்குவரத்துமந்திரி பேசியதைச் சிந்தித்துப் பார்க்கும்போது மனம் உருகாமலில்லை.

இத்தகைய ஓர்இரங்கத்தக்க நிலைமையிலே இன்று எமதுநாட்டில் பயங்கரமான—பரிதாபகரமான ஒரு சூழ்நிலை உருவாகிக்கொண்டு வருகின்றதென்பதை அவதானிக்கும்எவர்தான் இந்நாட்டின் எதிர்காலத்தையிட்டுக் கவலைகொள்ளாதிருப்பர்? தற்கொலைகளும், தற்கொலைமுயற்சிகளும், மற்றும் படுகொலைகள், பயங்கரகொலைகள் அவலமரணங்கள், பழிபாதகச் செயல்கள் ஆதியனவும் நாளுக்கு நாள், வாரத்துக்குவாரம் அதிகரித்துக்கொண்டு வருவதானது எல்லோருக்குமே அங்கலாய்ப்பைத் தருகின்றது. இவைகளிலெல்லாம் இன்றுநிகழும் தற்கொலைச்சம்பவங்களே பலருக்கும் அதிகம்மனவேதனை உண்டுபண்ணுகின்றது. இவர்கள் தங்கள்ஆருயிரை இப்படியெல்லாம் அவகேடாய் மாய்த்துக்கொள்வதற்குக் காரணங்கள் கண்டறியப்படாமலில்லை. இவற்றுளெல்லாம் முக்கியமானது, கடவுள்பக்தியும், சமயப்பற்றும் குறைந்துகொண்டுவருவதே, நாஸ்திகத்தைப்பரப்பும் மாக்ஸியர்களின் புத்தகங்கள், பத்திரிகைகள், மற்றும்பிரசுரங்களைப் படிக்கும்தோறும், கண்கொண்டு பார்க்கத்தகாத சிற்றின்பம் உண்டுபண்ணுவனவும், கொள்ளை, கொலை, சூதுவாது, காதல்ஆதியாம் சம்பவங்களைக் கொண்டனவுமான கெட்ட படக்காட்சிகளைப் பார்க்குந்தோறும், மாசற்றஉளங்களைப் பாழாக்கும் கெட்டபுத்தகங்களைப் படிக்குந்தோறும் இளைஞர்களிடமும், ஏனையவர்களிடமும் கடவுள்பக்தியோ, சமயப்பற்றுதலோ அழிவதல்லாது நிலைபெறுவது எங்ஙனம்? கடவுள் பயம் இல்லாதபோதே – "எங்கும் உளனொருவன் காணும்கொல்" என்றஅச்சம் இல்லாதொழிந்தபோதே எந்தவிதமான அக்கிரமந்தான் தலைகாட்டாதிருக்கும்? பணக்கஷ்டம் ஏற்பட்டால்—மனக்கிலேசம் எழுந்தால்—காதலில் தோல்விகண்டால்—நினைத்தபடிகருமம் நிறைவேருதிருந்தால்—குடிவெறியால் குடும்பத்திலே சமாதானம் குலைந்தால்—பழிவாங்கநினைந்தால் — காரியம் கைகூடாதிருந்தால் இவற்றிற்கெல்லாம் மாற்றுமருந்து தற்கொலைசெய்து கொள்வதுதானென்ற விபரீத மனப்பான்மை இன்றுதலைகாட்டியிருப்பது வருந்தத்தக்கதே.

ஒருவிதபயங்கர ஆத்மீககொள்ளை நோய் தானேவென்று உள்ளத்திலே சிந்திக்கக்கூடிய இகழ்ச்சி தரும் இந்தத் தற்கொலைமுயற்சிகள் பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ள ஒருவகைத் தண்டனையாகுமா? அங்ஙனமாயின் நமது மக்களின் ஆத்மீகவாழ்க்கையிலே ஒருநல்லமறுமலர்ச்சி ஆவசியகம் வேண்டற்பாலதாகும். பெற்ரூரும், சமயதலைவர்களும், சமூகசேவையாளரும், அரசினர்தாமும் இந்தத்தற்கொலைமுயற்சிகளுக்கான ஏதுக்களை ஆராய்ந்து, அவற்றைத்தடுக்க முயற்சியெடுக்கவேண்டும். கடவுள் பக்தியையும், சமயப்பற்றையும், கடவுள்பயத்தையும், சகோதர உணர்ச்சியையும், கட்டுப்பாடான வாழ்க்கையையும், சன்மார்க்கத்தையும், பங்கப்படுத்திப் பாழாக்கும் புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், மற்றும்பிரசுரங்களையும், படக்காட்சிகளையும், அலங்கோல நடையுடைபாவனைகளையும் குடும்பங்கள், சனசமூகங்கள் மத்தியிலிருந்து அறவேஒழித்து, அவற்றைப் படியாமலும்,பார்க்காமலும், கண்டு பாவியாமலும் தடைசெய்யவேண்டும். நாட்டில்பிரசுரமாகும் பத்திரிகைகளிலும் தற்கொலை, காதல், விபசாரம், சோரத்தனம், பலாத்காரம் சம்பந்தமான செய்திகளும், வழக்கு விபரங்களும் பிரசுரமாகாது தணிக்கைசெய்யப்படவேண்டும். சிலகாலமாக எமதுநாட்டின் தினத்தாள்களிலே வெளிவரும் செய்திகளிலிருந்து தற்கொலைகளும், கொலைகளும், வீதிகளில்நேரும் விபத்து மரணங்களும் வாரந்தோறும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன என்பது நன்குபுலனுகின்றது. வினை விதைத்தவன் தினையறுக்கப் போவதில்லை. ஆமணக்குவிதைத்தால் ஆச்சா முளைக்கப்போவதில்லை. இந்தப்பாதகச்செயல்களைக் கட்டுப்படுத்தாதிருந்தால் பின்னர் நாடு முழுவதும் பரந்துகொண்டபின் அவைகளைக் கட்டுப்படுத்துவது பெருங்கஷ்டமாகி அப்போது நாட்டுக்குப் பெரும்பழியை உண்டுபண்ணுவதில் சந்தேகமில்லை.

## பழைய தபசுகால அனுசரிப்பைப் பாப்பரசர் புதுப்பிக்கிருர்

இருநூற்ருண்டுகளாகத் தபசுகாலப் "பூசை நிலையங்க"ளுக்குச் (கோயில்களுக்கு) செல்லும் ஊர்வலங்களில் பங்குபற்றும் வழக்கற்றிருந்த பாரம்பரியமொன்றைப் புதுப்பித்து வருகிருர் அருளப்ப பாப்பு. 18-ம் நூற்ருண்டின் மத்தியில், 8-வது சாந்தப்பர் நடாத்திய ஊர்வலங்களைத் திரும்பவும் நடாத்தும் முதல் பாப்பரசர் இவரேயாவர்.

விபூதிப் புதனன்று 330 யார் தூரத்திலுள்ள அர்ச். சபினுள் ஆலயத்துக்குச் சென்றபொழுது கருதினல் பதவிக்கு உயர்த்தப்படவிருக்கும் மைக்கல் பிறவுண் சுவாமிகள் பாப்பரசரை வரவேற்ருர். இந்தத் தபசுகால அனுசரணைகளை, வத்திக்கான் சங்க ஆயத்தங்களுள் ஒன்ருகக் கைக்கொள்ளுகிருர் பாப்பரசர்.

முற்காலத்தில் ரோமையிலுள்ள குருமாரும் கிறிஸ்தவமக்களும் தபசுகாலத்தில் குறிக்கப்பட்ட இடங்களிலுள்ள கோயில்களுக்குச் சென்று பூசை ஒப்புக்கொடுப்பார்கள். இவ்விடங்களைப் "பூசை நிலையங்கள்" என்றழைப்பர். சென்ற ஆண்டுகளில் பாப்பு குறிக்கப்பட்ட ஆலயங்களுக்குச் சென்ருர். இம்முறை தாமே ஊர்வலத்தில் கலந்துகொள்ளுகிருர். இரண்டாந்தர நிலையங்களை ஏற்படுத்துவதிலிருந்து பெரிய பட்டணங்களில் நாம் செய்யவேண்டியதைக் குறிப்பிடுகிருர். தபசுகால முதல் ஞாயிறன்று வெனெசியா முற்றவெளியிலுள்ள அர்ச். மார்க்கு ஆலயத்திலிருந்து, யேசுசபையினரின் யேசுபோலயத்திற்குச் சென்ருர். செல்லும்வழியில் பொதுவுடமைக் கட்சிக் காரியாலயத்தைக் கடந்துசென்ருர். அவ்வேளை காரியாலயம் மூடப்பட்டிருந்தது.

சாந்த சபினுள் ஆலயத்தில் பாப்பரசர் பேசியபொழுது சங்கத்தையும் ஒற்றுமை இயக்கத்தையும் பீடிகையாகக்கொண்டார்.

குறித்தசில ஒழுங்குகள்பற்றி என்ன அபிப்பிராய பேதமிருப்பினும், அளவு கடந்த மாற்றங்களை எதிர்பார்த்துக் கணக்காணுபவரின் கற்பனையை ஆரம்பத்திலேயே கலைத்துவிடுவது உத்தமம். உத்தியோகமுறையில் இக்கற்பனைச் சரக்கைத் திருச்சபை ஆதரிக்கவில்லையெனினும் சங்கம் முடிந்ததும் எல்லாம் "சப்"பென்ருகிவிடக்கூடாது. மேற்றிராணிமாரிடையில் பழைமை தழுவுவோரும் தீவிரவாதிகளுமுளர் எனப் பேசப்படுகிறது. இஸ்பிரீத்து சாந்துவே சங்கமூலம் பேசுவார் என்பதை அடிப்படையாகக் கொள்ளவேண்டும். வத்திக்கான் சங்கம் திருச்சபையின் அகத்துறையைச் சார்ந்தது; சங்கத்தின்பின் "இதுவே உங்கள் மூதாதைகளின் சபை; உங்களை நாம் வரவேற்கத்தயார்" எனப் பிரிந்திருப்பவருக்குக் கூறுவோம்.

## செப அப்போஸ்தலசபை வெளியீடு

### பங்குனி மாதம்

**பொதுக்கருத்து:** விசுவாசிகளிடையே காணப்படும் பழக்க வழக்கங்களின் மறுமலர்ச்சியானது மானிடரிடையே கிறிஸ்தவ மறுமலர்ச்சியை உண்டாக்கும்படியாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** பரிசுத்தசுவிசேஷத்தின் பிரசங்கம் மிஷன் நாடுகளில் வாழும் விசுவாசிகள் தேவதிரவியானுமானங்களைப் பெறுவதினுலும், புண்ணியங்களை அனுசரிப்பதினுலும் இன்னும் முற்ருன பரிசுத்ததனத்தை அடையப்பண்ணுமாறு மன்ருடிக்கொள்வது.

* * *

### காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

## சத்தியவேத பாதுகாவலன்

### சந்தா விபரம்

வருட சந்தா

| | |
|---|---|
| இலங்கை | ரூபா 6-00 |
| வெளி நாடுகள் | ,, 6-50 |
| தனிப்பிரதி | சதம் 12 |

| | ரூ. ச. |
|---|---|
| நன்றியறிந்த ஸ்தோத்திரம் ... | 2-00 |
| ஓடர்நிசி (Order Nisi) இரு முறைக்கு ... | 10-00 |

மற்றும் விபரங்களுக்குக் கடிதமூலமாகவோ அன்றேல் நேரிலோ மனுப்பண்ணிக் கொள்ளவும்.

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

> மனச்சஞ்சலத்திற்கு இடங்கொடாதே. ஏனெனில், மன அமைதியில்லாவிடில் நீ சர்வேசுரனோடு பேசமாட்டாய். நம்பிக்கையும் தளர்வடையும், நீ தேவ ஊழியத்தில் குளிர்ந்தவனுய் அசமந்தமுள்ளவனுய்ப் போகலாம்.

## சத்தியமறைச் சல்லாபம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறிஸ்தவர்களின் தூயவாழ்வைக் கெடுத்துவிடும் என்றும்கண்டார். அதனுல் மாலைப்பூசையைப் புகுத்தினுர். உபவாசமுறையையும் தளர்த்தினுர்.

அந்தோனி: ஐயா, வணக்கம். எனது அறியாத்தனத்தைப் போக்கினீர்கள். ஞான ஒடுக்கத்துக்குப் போவேன். பாஸ்குக்கடமையையும் தீர்ப்பேன். அன்னம் எனக்கு நல்லவள் தான்.

அன்னம்: மரியாயே வாழ்க! யேசுவின் இராட்சியம் வருக! (படத்தின் பக்கமாகத் திரும்பி நின்று சொல்லுகிருள்.)

சுவாந்தர்: நல்லநிலத்தில் விழுந்த விதை ஒன்றுக்கு நூருகப் பலனளிக்கும் என்பதில் எனக்கு முழுநம்பிக்கையுண்டு. ஆனுல், சாத்தான் பொறுத்திருந்து படையெடுப்பான், கவனம். வீட்டில் திருஇருதய ஸ்தாபகத்தையும்கண்டு மனம்மகிழ்ந்தேன். 'எல்லாம் நன்மைக்கே' நான் வருகிறேன்.

அன்னம்: வெற்றிலை போட்டீர்களா அப்பா?

சுவாந்தர்: ஆமாம், வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியமறைச் சல்லாபம்

அன்னம்: இஞ்சேருங்க, உங்களைத் தான். கேட்டீங்களா!

அந்தோனி: என்ன, சொல்லன் சங்கதியை ........

அன்னம்: பாஸ்குப்பெருநாளும் கிட்டவருகுது; அந்தக்கடனைத் தீர்த்து விட்டால் என்ன?

அந்தோனி: என்ன அன்னம் பாற்கடனு அல்லது சீலைக்கடனு?

அன்னம்: பாஸ்குக்கடனைத்தான். போங்கள் கோவிலுக்கு.

அந்தோனி: நீ மரியாயின் சேனையென்றால் உன்பாட்டிலே இரு. ஆவதும் பெண்ணால், அழிவதும் பெண்ணால்; சும்மா மனிதனை அலட்டாதே.

அன்னம்: என்ன, ஏழாவதுபிள்ளை 'அற்புதம்' பிறப்பதற்கு முன்பெல்லாம் கோவிலும் குளமுமாய் இருந்தீங்க. இப்போது என்னமோவெல்லாம் பிதற்றுகிறீங்க. பசாசு குடிகொண்டு ......

அந்தோனி: நிறுத்து. உனக்கு வேலையில்லையென்றால் என்னைக் கரைச்சற்படுத்தாதே. உனக்குச் சேனையும் வேண்டாம்...... சேவையும் வேண்டாம்...... புதன்கிழமை சேனைக்கென்று புறப்பட்டால் பார்த்துக்கொள் என்ன நடக்குமென்று! (என்று அதட்டிக்கொண்டு எழுந்தான்).

சுவாந்தர்: அன்னம்! என்ன அமளிதுமளி? அந்தோனி ஆத்திரப்படாதே அப்பா. 'பெண்என்றால் பேயும் இரங்குமே.' ஏன் உனக்கு இவ்வளவு கோபம்?

அன்னம்: அப்பா, வாருங்கோ; 'பாஸ்குக்கடனைத் தீருங்க' என்று சொல்லிவிட்டேன் என்றுதான் இவ்வளவு அட்டகாசம் போடுகிறார்.

அந்தோனி: விடிந்தால், பொழுதுபட்டால் நேரம்கிடைத்தால்தானே. எட்டுப்பிள்ளைகளுக்கும் ஜீவனம்தேட வேண்டாமா?

சுவாந்தர்: எட்டுப்பிள்ளைகள்! பாக்கியமானகுடும்பம்; கடவுளுக்குத்தோத்திரம். அந்தோனி, உன்னை நான் குழந்தைதொடங்கி நன்குஅறிவேன். ஏன், சடங்குக்குப்பிறகும் முதல்வெள்ளி, முதற்சனியெல்லாம் உன்னைக் கோவிலிற்காண்பேன். இப்பொழுது என்ன மனமாற்றம் வந்துவிட்டது? 'என்னைத் தேடு சகலமும் உன்னைத்தேடும்' என்ற தேவவாக்கை மறந்துவிடாதே. அற்ப அடைக்கலாங்குருவியைப் போஷித்துக் காப்பாற்றுகிற பரமபிதா அழியாத ஆத்துமமுள்ள எங்களைக் கைவிடுவாரா? கடவுள் இல்லையென்று பிதற்றும் நாஸ்திகர்தான் இவ்வுண்மைகளை மறைத்துப் பேசுவர்.

அந்தோனி: நான் என்ன பழிபாதகஞ் செய்தோன்? பாவசங்கீர்த்தனம் என்னத்திற்கு! முந்தின நாட்களில் கோவிலுக்குப் போய்வந்தபலனாக இனி கடவுள்முகம் பார்ப்பார்தானே. பாஸ்குக் கடமைதான் என்னத்திற்கு.

சுவாந்தர்: என்ன விசுவாசம்இல்லாமற் பேசுகிறாய். கடைசிவரையும் நிலைத்திருப்பவனே இரட்சணியம் அடைவான். 'வருடத்தில் ஒருமுறையென்கிலும் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்வாயாக.' 'பாஸ்குகாலத்தில் ஒரு முறையென்கிலும் தேவநற்கருணை பெறுவாயாக.' இவைஇரண்டும் திருச்சபையின் கட்டளைகள் அல்லவா? திருச்சபையின் சொற்படி கேளாதவன் திருச்சபைக்குப் புறம்பானவனுகக்கடவான் என்பதை அறியாமலா பேசுகிறாய்?

அன்னம்: உலகவெகுமானம், பாக்கியம், சுகசெல்வம் எல்லாவற்றையும் தேடி, கடைசியாகக் கொண்டுபோவது ஒன்றும் இல்லையே. வருடம் 365நாட்களில் ஒருநாள் ஆண்டவர் நமக்காகப் பாடுபட்ட தபசுகாலத்திலேயாகிலும் நல்லபாவசங்கீர்த்தனம்செய்து நன்மை வாங்காத கிறிஸ்தவன், என்னகிறிஸ்தவன்? ஒவ்வொருத்தரும் அற்பகாரியத்துக்கெல்லாம் என்னென்ன பிரயாசையெல்லாம் எடுக்கிறாங்க. இவர் என்னடாஎன்றால் கடவுளைத்தேட நேரமில்லையாம்!

அந்தோனி: அம்மணி! பிரசங்கம் முடிந்துவிட்டதா?

அன்னம்: உம், பிரசங்கம்......வீட்டில் வளர்கிறபிள்ளைகளை வைத்துக்கொண்டு, நாங்க நடக்கிறதுபோலத்தான் நாளைக்கு அவர்களும் நடப்பார்கள். ஐயா, என்னை மரியாயின்சேனை என்று ஏசுகிறார்...... அவர் சமசமாசக் கட்சிக்குப் போகிறார், வருகிறார்.

அந்தோனி: சமசமாசக்கட்சி, சம அந்தஸ்துக்கட்சி சமயத்துக்கும், கடவுளுக்கும் அந்தக்கட்சி ஒன்றும் செய்யாதுங்க.

சுவாந்தர்: ஓஹோ! சமசமாசக் கட்சியா? அது சமன், சமன்என்று ஆசைவார்த்தைபேசி மக்களைஏமாற்றி ஒழுக்கத்தைக் கெடுக்கிறதுதான் வேலை. அந்தோனி, நீ யேசுவைநேசி; உண்மையை வாசி; யேசுவின் பதிலாளிகளான மேற்றிராணிமாரையும், குருமாரையும் நேசி; உனக்கு மனப்பாக்கியம் கிடைக்கும். அதுவே மோட்சபாக்கியத்தின் முன்சுவை. சுவிசேஷ மார்த்தாளைப்போல உலகத்தில்உத்தமமானபங்கைத் தெரிந்துகொள்வதே உண்மைஞானமாகும்.

அன்னம்: ஆண்பிள்ளைகளுக்கென்று மூன்றுநாள் ஞானஒடுக்கம் நடக்கப்போகுதாம், போங்களன்! இனிமேல் சமசமாசக் கட்சியைவிட்டு யேசுவையும், அவர் கட்சியையும் தேடுங்க.

அந்தோனி: அப்பா, நான் என்ன பாவம் செய்தேன். குடிப்பேன். வெறித்தால் பேசுவேன். கூட்டாளிமாருடன் உலாவுவேன். வெறிமெத்தினால் பெண்பிள்ளைகளைக்கண்டால் சிரிப்பேன். இவ்வளவுந்தான்.

சுவாந்தர்: இவ்வளவும்காணும் உன் ஆன்மாவைக் கெடுக்க. கெட்டுப்போய்விட்டாய். ஐயோ, இந்தக்காலத்தில் பாவசங்கீர்த்தனம், நன்மைஎன்பதில் ஆண்கள் ஒருபுதுவிதம். சிறுவர்களாய் இருக்கும்போது சமயம், கோவில் நாள்தோறும்...... எட்டாம்வகுப்புப் படித்துவிட்டால் பூசை, பாடசாலை தடுமாறும்...... இருபத்தைந்து முப்பது வயதென்றால் பேசத்தேவையில்லை. வேதமென்றால் நஞ்சு. அரசியலும், சுகபோகமுந்தான். ஆதலால், கணவனை நல்வழிப்படுத்துவதும், கிறிஸ்தவவாழ்வுக்கு இட்டுச்செல்வதும் மனைவியுடைய கடமை. அவள் செபம், தபம், தியாகம், அன்பு, ஆதரவால் கணவனைக் காப்பாற்றவேண்டும்.

அந்தோனி: பாஸ்குக் கடமைக்குரியகாலம் முடிந்துவிட்டதா?

சுவாந்தர்: பொதுவில் திருப்பாடுகளின் 2-ம்ஞாயிறு அல்லது குருத்து ஞாயிறிலிருந்து பாஸ்குத்திருநாளுக்குப் பின்வரும் முதல் ஞாயிறுமுடிய பாஸ்குக்கடனைத்தீர்க்க வேண்டுமென்பர். ஆனால், அந்தந்தப்பகுதிக் கிறிஸ்தவர்களுக்கு ஏற்க, மேற்றிராணிமார் நீண்டகாலத்தைக் குறிக்கலாம். இலங்கையில் விபூதித்திருநாளிலிருந்து அர்ச். தமதிரீத்துவத்தின் திருநாள் வரையாகும். அதனால் திருஇருதய அடியார்களும், மரியாயின் பக்தருமான நல்லகிறிஸ்தவர்கள் தாம்வாழும் பகுதி, தெரு, தொழிற்சாலை என்பவற்றில் கரிசனையாகக் கிறிஸ்தவர்களைவிசாரித்துப் பாஸ்குக்கடனைத் தீர்ப்பிக்க மறக்கமாட்டார்கள். இதுதான் சேவை.

அந்தோனி: நான் தவறிவிட்டேன். நாஸ்திகத்திலிருந்து பிழைக்க அந்த மோட்சமன்னவைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பேன்.

சுவாந்தர்: 12-ம்பத்திநாதர் வந்தார். தொழிலாளிகளின் உலகை நோக்கினார். இராப்பகலாய்க் களைத்துப்போகிறவர்கள் காலைவரை உபவாசமாய் இருப்பது எப்படிஎன்று உணர்ந்தார். தெய்[illegible]டால் நாஸ்திகமும், [illegible]

(தொடர்ச்சி 4-ம்பக்கம்)

# இருளில் ஒளி

— 30 —

வின்பிரிட் கேர்ப்ஸ்ற் எழுதுவது:

எழுபதாண்டு நிரம்பிய ஜோர்ஜ் தங்குவதற்கு இடமின்றித் தவித்தார். எனவே நண்பர் கார்ள் அவரைத் தமதில்லத்துக்கு அழைத்தார். திரு. கார்ள் அதே வயதினர். வயோதிப நோயால் வருந்துபவர். நல்ல கத்தோலிக்கர். உறவினர் அற்றவர். அவரது இல்லம் கத்தோலிக்க தேவாலயத்துக்கு அண்மையில் அமைந்திருந்தது.

ஜோர்ஜ் அவ்வில்லத்தின் முன்பக்கமாக அமர்ந்தவண்ணம் ஆலயத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் நோக்குவார். அடிக்கடி அவ்வழியே நடமாடும் விசாரணைக் குரவருடன் உரையாடுவார். படுத்தபடுக்கையாகக்கிடக்கும் தமதுநண்பர் கார்ள் நன்மை பெறுந் தருணங்களில் அறையை அலங்கரிப்பார்.

சடுதியாக அதிர்வுநோய்க்குள்ளான ஜோர்ஜ் மருத்துவமனையிலனுமதிக்கப்பட்டார். கையில் ஒரு ஜெபமாலையுடன் காட்சியளித்ததால் முதலில் அவர் ஒரு கத்தோலிக்கர் என்றேஎண்ணினேன். நான் கத்தோலிக்கனுக ஆசிக்கிறேன் உறவினர்கள் அதைவிரும்பவில்லை எனினும் எதிர்த்துப்போராடுவேன் என ஜோர்ஜ் உறுதியாக மொழிந்தார்.

கத்தோலிக்க ஜெபங்களை அவர் நன்கறிந்திருந்தார். மதக்கல்வியும் ஓரளவு தெரியும். இவை நண்பர் கார்ள் தமது நோயோடு செய்த சேவையின் பலன்களாகும். பங்குக்குரவருக்கு ஜோர்ஜ்ஜின் நிலையைத் தெரிவித்தேன். மறுதினம், அதிகாலையில் குரவரின்செய்தியொன்றைப் பெற்றேன். உங்கள் நண்பருக்கு ஞானமுழுக்களித்து மற்றைய தேவதிரவிய அனுமானங்களையும் வழங்கினேன் என அச்செய்தி தெரிவித்தது. மகிழ்ச்சியுடன் மருத்துவமனையை அண்மினேன். அவரது படுக்கை காலியாகக்காணப்பட்டது. உங்கள் நண்பர்மரித்துவிட்டார் எனத்தாதி துயரத்துடன் கூறினாள்.

உறவினர்களால் வெறுக்கப்பட்ட ஜோர்ஜ்ஜின் மரணச்சடங்குகள் ஏராளமான கத்தோலிக்கநண்பர்களுடன் சிறப்பாக நடந்தேறியது. ஆடம்பரமாக ஆலயத்திலிருந்து வெளியேறிய நண்பனின் பிரேத ஊர்வலத்தைக்கண்டு ஆனந்தக்கண்ணீர் உகுத்தார் கார்ள்.

—சா. பெ.

# பேசும் பேனா

## திருடனைப்போல

இருவாரங்களுக்குமுன் பகல் பத்து மணியளவில் பஸ்வண்டிக்காகக் காத்துநின்ற பெரியாரொருவரைச் சந்தித்தேன். இரு மணித்தியாலங்களின் பின்னர் அவரது இல்லத்திலிருந்து அழுகைக்குரல் கேட்டது. மருத்துவமனையில் அப்பெரியார் காலமாகிவிட்டதாகக் கூறினார்கள். நல்ல சுகபெலத்துடன் சற்றுநேரத்தின்முன்னர் காணப்பட்டவருக்கு நேர்ந்த கதி இது. எனினும் அவரது ஆன்மாவையிட்டு எவரும் கவலைகொள்வதற்கில்லை. தம்வேதக்கடமைகளைச் சுமுத்திரையாய் அனுசரித்தவர் அம்மனிதர். அன்றுகாலை தபசுகால ஆரம்பபூசைக்கும் சமுகமளித்து விபூதியணிந்துகொண்டார்.

மரணம் திருடனைப்போல வரும் என்பதற்கு இதுபோன்ற சம்பவங்கள் தக்க எடுத்துக்காட்டு. நம்மில் மரணத்தை மனக்கண்முன் எப்போதும் வைத்திருப்போர் எத்தனைபேர்? பேரரசர் ஒருவர் தமது ஊர்வலத்தின் முன்னல் பிரேதப்பேழையொன்றைச் சுமந்துசெல்லும்படி கட்டளையிட்டாராம். தமது மரணத்தை என்றென்றும் நினைவுறுத்தவே அவ்வழியைக் கையாண்டார். மரணத்தை நம்மனக்கண்ணில் வைத்திருப்போமாகில் எமதான்மாவும் அதற்குத் தயாராகக் காத்திருக்கும்.

## தயாராகவிருக்கிறீரா?

நம்மிடையே பிரசித்திபெற்று வி[illegible]ங்கியொருவர் கூறிய [illegible]ன்றையும் இத்தருணத்தில் குறிப்பிடவிரும்புகின்றேன்.

அத்திலாந்திக் சமுத்திரத்தில் மிகப்பெரிய கப்பலொன்று பிரயாணம் செய்துகொண்டிருந்தது. எதிர்பாராதவிதமாக பாறையொன்றில் மோதியகப்பல் பயங்கர ஆபத்தில் சிக்கிக்கொண்டது. கப்பலதிகாரிகள் வானொலிமூலம் நாலுபக்கங்கட்கும் வேண்டுகோள் விடுத்தனர். எனினும் உதவிகளெதுவும் கிடைக்கவில்லை. எனவே கப்பலிலிருந்த ஒரேயொரு ஜீவரட்சகப்படகில் அது கொள்ளக்கூடியளவு பிரயாணிகளை மட்டும் ஏற்றிவிடுவதெனப் பிரதமமாலுமி தீர்மானித்தார். அதிர்ஷ்டச்சீட்டிழுப்பினல் பிரயாணிகளில் சிலர் தெரியப்பட்டனர். அதிஷ்டசாலிகளான அப்பிரயாணிகட்கு அடையாளச்சீட்டுகளைக்கொடுத்து ஜீவரட்சகப்படகில் ஏறிக்கொள்ளுமாறு உத்தரவிட்டனர்.

சீட்டைப்பெற்ற நடுத்தரவயதுள்ள வர்த்தகரொருவர் கப்பலின் மேற்றளத்துக்கு ஓடினார். அங்கு தமது மருகரான வாலிபரைக்கண்டார். 'தம்பி, உயிர்தப்பும் பிரயாணிகளுள் யானும் ஒருவன். மற்றவர்களைப் போல நீரும் மரணத்துக்குத் தயாராகவிருக்கிறீரா' எனக்கேட்டார். பதிலேதும் சொல்லவில்லை வாலிபர். அவர் பாவசங்கீர்த்தனத் தொட்டியைக்கண்டு பலமாதங்களாகிவிட்டனவே. வர்த்தகர் கூறினார்: "பேசிக்கொண்டிருப்பதற்குச் சமயமில்லை. கப்பலில் ஏறுவதற்குமுன்னரே நான் எனதான்மாவைத் தயார்செய்துகொண்டேன். மரணத்தை எதிர்நோக்க யான் தயார். இச்சீட்டைக்காட்டி உமதுயிரைக்காப்பாற்றிக்கொள்ளும்." வாலிபர் உயிர்தப்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

அன்புத் தம்பி தங்கையரே!

பங்குனி மாதம் 26-ந் தேதி, அதாவது இவ்வாரம் ஞாயிற்றுக்கிழமை தேவமாதாவுக்கு கபிரியேல் சம்மனசானவர் மங்களம் சொன்ன திருநாள் கொண்டாடப்படும். தேவதாயாராகும் வாய்ப்பு இன்றுதான் மரியம்மாளுக்குக் கிடைத்தது. "இதோ ஆண்டவருடைய அடிமையானவள்" என்று தேவதாயார் சருவேசுரனுடைய சித்தத்துக்குப் பணிந்து சம்மதம் கொடுத்த அந்த நேரமுதல் கன்னிமரியம்மாள் தேவனின் தாயாரானாள். தேவனின் தாயாரானதினால்தான் அவள் நமக்கும் தாயாரானாள். இன்று தினம் கபிரியேல் சம்மனசானவர் தேவதாயாரை வாழ்த்திய "பிரியதத்தத்தினாலே பூரணமானவளே வாழ்க!" என்ற வார்த்தைகளை நீங்கள் அடிக்கடி சொல்லித் தேவதாயாரை வாழ்த்துங்கள். அத்துடன் இவ்வளவு பெரிய பதவிக்கு மரியாயை உயர்த்திய எல்லாம்வல்ல இறைவனைத் தோத்திரியுங்கள்.

அன்புள்ள அண்ணா.

## படிக்கும் முறைகள் பத்து

நீங்கள் படிக்கும் பாடங்களில் அதிக புள்ளிகளைப் பெறத்தவறியிருந்தால் அதற்குக்காரணம் நீங்கள் ஒழுங்காகப் படிக்கவில்லை என்பதே. படிப்பதற்கு உரிய சிறந்த வழிகள் பத்தைக் கீழே தருகிறார் ஓர் ஆசிரியர். அவற்றை நீங்கள் அறிந்து பயனடையவேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

அண்ணா

**இதோ படித்தறியுங்கள் :**

1. நீங்கள் படிக்கும் பாடத்தில் உங்களுக்கு விருப்பம் இருக்க வேண்டும்.
2. பாடத்தின் அடிப்படைக் கருத்தைச் சுருக்கமாக அறிந்த பின்பே, படிக்கத் தொடங்குங்கள். விளங்காமல் எதையும் மனனம்செய்யாதேயுங்கள்.
3. பாடத்தை முதலில் ஒருமுறை முழுதும் படித்துவிட்டு, பின்னர் இரண்டு மூன்று நாட்களுக்கொருமுறை தொடர்ந்து படியுங்கள்.
4. படித்த ஒரு விடயம் நன்றாக மனதில் பதிந்துவிடவில்லை என்று கண்டால் திரும்பவும் அதைப் படியுங்கள்.
5. படித்த விடயத்தை (புத்தகத்தை அல்லது அப்பியாசக் கொப்பியை மூடிவைத்துவிட்டு) மனதுக்குள்ளே சொல்லிப்பாருங்கள். இவ்விதம் செய்தால் படித்த விடயங்களில் எப்பகுதிகள் இன்னும் மனதில் படியவில்லை என்பதை அறிந்து படிக்கமுடியும்.
6. படிக்கும்போது பாடத்தைவிட வேறு எந்தச் சிந்தனைக்கும், பராக்குக்கும் இடங்கொடுத்து மனத்தை அலையவிடாதீர்கள். படிக்கவேண்டும் என்று மனம் எண்ணும்போது மாத்திரம் படியுங்கள்.
7. படித்த விடயத்தை, இரைமீட்கும் பசுவைப்போல், ஓரிடத்தில் அமைதியாகவிருந்து (மீட்டு) நினைவுகூர்ந்து பாருங்கள். அப்பொழுது குறையிருந்தால் உடனே திருத்திக்கொள்ள வேண்டும்.
8. நெடுநேரம் ஓரேயடியாய் இருந்து படிக்கவேண்டாம். ஒரு மணித்தியாலம் படித்தவுடன், ஐந்து, பத்து நிமிடங்கள் ஓய்வெடுத்துக்கொண்டு, பின் மீண்டும் படிக்கத் தொடங்குங்கள்.
9. சிலவேளைகளில் ஒரு விடயத்தைப் படிக்கும்போது, அப்பகுதியை முன்னர் எப்போதோ படித்ததுபோல் ஞாபகம்வரும். அப்பொழுது முழுப்பகுதியையும் உடனே சொல்லிவிடுவீர்கள். இதனால் காலமும், சக்தியும் மிஞ்சுகிறது.
10. எதற்கும் உங்களுக்குத் தன்னம்பிக்கை வேண்டும். முடியாது என்று ஒன்றுமில்லை; முயன்றால் எதுவும் முடியும். தன்னம்பிக்கை இல்லாவிட்டால் வாழ்க்கையே இல்லை.

—✻—

சிறுகதை

## தியாகச் சின்னங்கள்

டணங்... டணங் என்று அர்ச். தோமையார் ஆலயத்தின் கோபுர மணிகெம்பீரத்துடன் ஒலிக்கவில்லை; பதிலாகத் துக்கநாதம் செய்து ஓய்ந்தது. ஆலயம் நிறைந்திருந்தது பக்தர்களால், எல்லோர் முகத்திலும் சோகம் குடிகொண்டிருந்தது. அருமையானவர்கள், நண்பர்கள், பள்ளி மாணவர்கள், இனசனர்கள் மட்டுமல்ல, கல்நெஞ்சர்கூட உள்ளமுருகிவிடுவர் இச்சம்பவத்தைக்கேட்டு. பாடகர் குழாத்தில் குயில் இசை ஒலிக்கவில்லை. ஆம்! எல்லாச் சிறுவருடனும் ஒருங்குசேர்ந்து பாடிய இளவல்கள் இதோ கோவிலின் மத்தியிலே உயர்மேடையிலே சயனமாகிறார்கள். இந்தச் சோக நிலைக்குத் தான் காரணம் யாதோ? காரணம் இருக்கத்தான்வேண்டும்.

புரட்சிவெறியோடிய காலமது. கிறிஸ்து மதத்தை வேரோடு அழித்துவிடக் கங்கணங்கட்டிக்கொண்டிருந்தது ஒரு கும்பல். ஆனால், எந்தச் சக்தியாலும் திருச்சபையை இவ்வுலகத்தில் அழித்துவிட முடியாது என்று அவர்களுக்குத் தெரியாது. திருச்சபைச் சரித்திரத்தை அறியாதவர்கள் இவர்கள். இந்தப்புரட்சிக்காரருக்குப்பக்கபலமாக மதவிரோதிகள் சிலர் கிறிஸ்தவர்களுக்குள்ளேயே இருந்தனர். அப்படிப்பட்டவன் தான் யோண். அவன் புரட்சிக்காரருக்குத் தூதுவன். புரட்சிக்கு எதிராக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதைச் சில கையாட்கள்மூலம் உளவறிந்து புரட்சி ஆசாமிகளுக்கு அறிவிப்பதுதான் யோணின் வேலை.

ஆனால், யோணின் புதல்வர் அமிர்தநாதனும், அருமைநாதனும் திருக்குடும்பக் கன்னியர் நடாத்தும்பாடசாலையில்தான் கல்வி பயின்றுவந்தனர். யோணின் மனைவி — இச்சிறுவரின் தாயார், பக்தியுள்ள புண்ணியவதி. [illegible] அவ்வளவு கொடியவனாய் [illegible] இருந்தபோதும், அவள் தன் புதல்வர் இருவரையும் பக்தியிலும் விசுவாசத்திலும் வளர்த்து வந்தாள், வேதக்கடமைகளை அனுட்டித்துவந்தாள். அதுவுமன்றி அர்ச். தோமையாரிடம், தனது குமாரர் இருவரையும் உத்தமவிசுவாசத்தில் வழிநடத்தி, அதிக தைரியத்தை யளிக்கும்படி மன்றாடி வருவாள்.

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்ற கூக்குரல் எழுந்தது. அதற்கு மருடி ஊதினாற்போல அரசாங்கமும் சட்டம் கொண்டுவந்தது. கத்தோலிக்க பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கவிடமாட்டோம், எங்கள் உரிமைகளைப் பறிக்கப்பார்த்திரோம், வேதக்கல்வியை விலைகூறிவிற்கமாட்டோம். துறவிகளும், குருமாரும் ஆக்கிய கல்விச்சாலைகளைப் பறித்துவிட முடியாது என்று வீரமுள்ள உண்மைக் கிறிஸ்தவர்கள், விசுவாசமுள்ளவர்கள் மார்புதட்டி இந்த அநியாயமான சட்டத்தை எதிர்க்க போர்க்கோலமல்ல—தவக்கோலம்கொண்டனர். நிராயுதபாணிகளாக நின்று அறப்போராட்டத்தை நடத்தினர்.

இந்தவேளை யோணின் சதிக்கும்பல் மும்முரமாக வேலைசெய்யத் தொடங்கியது. பாடசாலைகளை அரசாங்கம் கைப்பற்றுவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்யத் திட்டமிட்டுக் கொண்டிருந்தனர் சதிக்கும்பலில் உள்ளவர்கள். நன்மைகளை மறந்து நன்றிகெட்ட கூட்டத்தினர் அற்பபிழைகளை அம்பலமாக்கி, அதிகப்படுத்திப் பொய்யும்சேர்த்துப்பிரசாரம் செய்தனர். யேசுவின் உண்மை ஊழியர்—வேதத்தில் உண்மையான பற்றுடையவர்கள்—சத்தியத்தின் வழி செல்பவர்கள் இந்த மிரட்டல்களுக்குக் கிறுங்கவில்லை.

யோண் தனது இருபுதல்வரையும் வேதப்பள்ளிக்கூடத்துக்கு அனுப்பாது தடுத்துவிட்டான். ஆனால் "உத்தம வேதப் புத்தகமான" யோணின் மனைவி அமலி தன்கண்மணிகளுக்குச்சிறந்தவழிகாட்டியாய், ஆறுதலாய் இருந்தாள். ஒருநாள் யோண் தனதுசிறாரை நோக்கி "இன்றுமுதல் நீங்கள் கோவிலுக்குப் போகக்கூடாது. வெளியே தலைகாட்டினால்... ......" என்று கோபாவேசத்தோடு விரட்டினான். வாராவாரம் புதன் கிழமைகளில் சதாசகாயமாதாவின் நவநாள் நடக்கும். அதற்குத் தவறாது அமலியும், சிறுவரிருவரும் போவது வழக்கம். யோண், கோவிலுக்குப் போகக்கூடாது என்று கட்டளை போட்டபின்னரும் அமலியும், மைந்தரும் கோவிலுக்கு நவநாள் செய்யச் சென்றனர். மாலை நேரமானதும்யோண்வீட்டுக்குவந்தான். மனைவியையும், மைந்தரையும் வீட்டிலே காணவில்லை. வேலைக்காரியிடமிருந்து விடயத்தை அறிந்ததும், ஆத்திரத்துடன் கோவிலைநோக்கி விரைந்தான். ஆராதனை முடிந்து பக்தர்கள் வீடுதிரும்பிவிட்டனர். கோவில் வெறுமையாகவிருந்தது. அமலியும், அருமைமக்களிருவரும் சதாசகாயமாதா பீடத்தடியில்முழந்தாள்மடித்துச்செபித்தவண்ணமாயிருந்தனர்.

வெறிபிடித்தவன்போல் கோவிலுக்குள் வந்த யோண், அமலியை ஒருகையிலும், தனது மக்களை மறுகரத்திலும் அழுங்குப்பிடியாகப் பற்றி இழுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தான். பளீர் பளீர் என மனைவிக்குத் தனது முரட்டுக் கைகளினால் அறைந்துவிட்டு, மூவரையும் ஓர் அறையிலே விட்டுப் பூட்டிவிட்டு வெளியே சென்றான். [தொடரும்]

—✻—

## நல்ல நாளில் நடந்தது

செல்வராஜ் அர்ச். சவேரியார் கல்லூரியில் படித்துவந்தான். அவன் தகப்பனார் அவனைக் கல்லூரி விடுதிச்சாலையில் விட்டுவைத்திருந்தார். ஏனென்றால், வீட்டிலிருந்தால் அவன் படிக்கமாட்டான் என்று அவருக்குத் தெரியும்.

ஒருநாள்—(பாடசாலைநாள்) அரசாங்க விடுமுறைநாள். விடுதிச்சாலை மாணவர்கள் வீட்டுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். செல்வராஜனும் வீட்டுக்குச் சென்றிருந்தான். விடுதிச்சாலையிலிருந்து வீட்டுக்குவந்தால் மகிழ்ச்சிக்கு அளவேது. உல்லாசமாக நாட்கள் சென்றன.

விடுமுறை முடிந்தது. திங்கட்கிழமை பாடசாலைக்குப் புறப்பட வேண்டும். செல்வராஜனின் தாயார் அன்று அட்டமிநவமி என்றும், கூடாதநாள் ஆதலால் மறுநாள் பாடசாலைக்குப் போகலாம் என்றும் அவனை மறித்துவிட்டாள்.

மறுநாள் செல்வராஜன் பள்ளிக்கூடம் சென்றான். முந்தியநாள் பாடசாலைக்கு வரத்தவறியதனால் விடுதிச்சாலை அதிபர் செல்வராஜனை அழைத்திருந்தார் காரணம் விசாரிப்பதற்காக.

அதிபர்: "ராஜு! ஏன் நீ நேற்றுப் பாடசாலைக்கு வரவில்லை?"

ராஜு: "கூடாதநாள் என்று அம்மா என்னைப் போகவேண்டாம் என்று தடுத்துவிட்டாள்."

அதிபர்: "சரி, இன்று நல்லநாள் தானே! நல்லநாளில் நல்ல பிரப்பம் பழங்களைச் சுவைக்கப்போகிறாய்" என்று ராஜுவுக்கு (செல்வராஜனுக்கு) ஆறு அடிகள் போட்டார் அதிபர்.

நல்லநாளில் இப்படியா நடக்க வேண்டும் என்று வருந்தினான் ராஜு.

[தம்பிமாரே! நீங்களும் நல்லநாள், கெட்டநாள் பார்ப்பதுண்டா? உங்கள் பெற்றோருக்கு நாள் பார்ப்பதுவழக்கமானாலும், கடவுள் படைத்தநாளில் பேதமில்லை என்று துணிந்து கூறிவிடுங்கள். கடவுளில் அதிக நம்பிக்கை வையுங்கள். இக்கதை உங்களுக்கு ஒரு பாடமாக இருக்கட்டும்]

— எஸ். எம். ஜே.

### நன்றித்துதி

திருஇருதயநாதரின் இரக்கத்தினாலும், பரிசுத்த சதாசகாயமாதாவின் சலுகையாலும், அர்ச். சூசையப்பர், கோடிஅற்புதராகிய அர்ச். அந்தோனியார் இவர்களின் வேண்டுதலினாலும் நாங்கள்கேட்ட மன்றாட்டுக் கிடைத்ததற்காக எங்கள் நன்றியறிதலை நேர்த்தியின்படி பிரசுரிக்கிறோம். இவர்களின்நாமம் எங்கும் என் [illegible] வது.

[illegible] ஓர் அடியான்

✝


திருமதி
சலோமை ஆசீர்வாதம் அவர்களின்
**2-ம்வருட**
**மரணஞாபகம்**
மறைவு: 30-3-60

எனது அருமை மனைவியும், எங்கள் நேசத்தாயாருமான திருமதி சலோமை ஆசீர்வாதம் காலம்சென்ற 2-ம்வருட ஞாபகம் நிகழும் 30-3-62-இல் வருகிறது. அன்று இளவாலை, சந்தியோகுமையோர் கோவிலில் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக ஓர் துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக்காணும் யாவரும் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

கணவர்: த. ஆசீர்வாதமும்,
பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும்,
பூட்டப்பிள்ளைகளும்.

இளவாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பசாசு செய்த பிரசங்கம்

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! உங்களை இங்கு ஒரு முறை சந்தித்ததையிட்டுச் சந்தோஷிக்கிறேன். "நன்றி மறப்பது நன்றன்று" என்பது வள்ளுவன் வாக்கு. எனவே கடந்த வருடம் நீவிர் எனக்குச்செய்த சேவைகளுக்கு நன்றிகூறவே விசேஷமாய் இங்கு வந்தேன்.

'நாகரிகம் நாகரிகம் என்று நாகரிகத்தின் உச்சிப்படியில் நிற்கும் நைலோன் நங்கைகளே! முந்த முந்த உங்களுக்கே என் நன்றியைச் சமர்ப்பிக்கிறேன். ஏனெனில் நீவிரே பார்த்து யாவரும் பாவசமடையும்படி கண்டோர் மனதைக் கொள்ளை கொண்டு பார்த்த பலர் பல்லிளிக்க சீற்றம் கொண்டு சிலர் சீ என்றேச கடந்த வருடம் முழுவதும் தொண்டாற்றியிருக்கின்றீர்கள்.'

'ஆபாசப் புத்தகங்களையும் பத்திரிகைகளையும் ஆவலுடன் விரும்பிப் படிப்போரே! நீங்களே அத்தகைய பிரசுரங்களை நடத்துவதற்குப் பண உதவி செய்யும் வள்ளல்களாயிருக்கிறீர்கள். இன்னும் நீவிர் படிப்பதும் போதாமல் மற்றையோர்க்கும் கொடுத்து அவர்களையும் படிக்கச் செய்வதையிட்டு, பேருவகை கொள்ளுகிறேன். கத்தோலிக்க பிரசுரங்களைக் 'கசிப்பு' என்று கருதிய கனவான்களே உங்களுக்கு என் நன்றி'.

'பங்குக்கோவிலிலே பக்திமுயற்சிகளான நற்கருணை ஆசீர்வாதம், செபமாலை, திருமணித்தியாலம், சிலுவைப் பாதை என்பன நடைபெறும்போது படமாளிகையை நோக்கிச் சிட்டாய்ப் பறந்த இளைஞரே! உங்களையிட்டு இன்பம் கொள்ளுகிறேன். இளைஞரான நீவிர் இப்பக்திமுயற்சிகளில் பங்குபற்றாததையிட்டுப் பரவசமடைகிறேன். இன்னும் ஏனைய இளைஞரை இழுத்துச் செல்வதையிட்டும் இன்பம்கொள்கிறேன். வருடாந்த ஞானவொடுக்கம் ஆடம்பரமாய் நடக்க அடுத்த வீட்டுப் பெண்களை அறைகூவி அழைத்து நானாவித நியாயம்பேசிப் பெருமையடைந்த பெண்மணிகளே! உங்களையிட்டுப் பெருமைகொள்கிறேன்'.

'குடி குடியைக் கெடுக்கும் என்பதை மறந்து குடியையே குலதெய்வமெனக்கருதி குடிப்பழக்கத்திலே குதூகலித்த குடும்பத்தெசமானரே! குடியால் நீவிர் குடியைக் கெடுப்பதுமன்றி ஏனைய பாதகங்களையும் குறைவின்றிப் புரிகின்றீர் என்பதையுணர்ந்து குதூகலிக்கிறேன். கத்தோலிக்க பாடசாலைகளே கிறீஸ்தவ சீவியத்தின் அஸ்திவாரம் என்பதை அடியோடு மறந்து, அவைகளை அரசாங்கப் பாடசாலைகளாக்க ஆதரவளித்த ஆதரவாளர்களே! நீவிர் செய்த இச்சேவை மிகவும் மகத்துவம் வாய்ந்ததாய் இருக்கிறது. அதற்கு என் இதயபூர்வமான நன்றி நவில்கின்றேன்'.

'கத்தோலிக்க குடும்பங்களில் நிலவ வேண்டிய ஒற்றுமையையும், ஏகத்துவத்தையும் கனவாகக் கருதிக் கருத்தடைப் பிரசாரம் செய்யும் கனவான்களே! இதனால் நீங்கள் மானிட விருத்திக்கு முற்றுப்புள்ளியிடுகிறீர்கள். ஆராய்ந்து செயலாற்றும் அறிவிருந்தும் நீவிர் செய்யும் இச்சேவை எனக்கு இன்பமளிக்கிறது. மேலும் அக்குடும்பங்களில் பிரிவினையை உண்டாக்கிப் பிரித்துவைக்கும் பிரியரே! இதனால் அக்குடும்பங்களில் சண்டை சச்சரவுகளுக்கு வழிதேடுகிறீர்கள். இதற்கு என் நன்றி'.

'பல்லி கத்துகிறதென்று 'பஸ்சில்' பிரயாணம் செய்யாமலும், காகம் கரைகிறதென்று கடமையைப் புரியாமலும் காலம் கழித்துவரும் கத்தோலிக்க சாஸ்திரிகளே, உங்களுக்கும் என் நன்றி. மகத்தான மாணவரே! கிளாசைக் 'கட்' பண்ணிப் படமாளிகைமுன் 'கியூ' வில் நின்றதற்கும், ஆபாசப் புத்தகங்களைப் புத்தகக்கட்டுக்குள் புதைத்துப் படித்ததற்கும் நன்றி'.

'இன்னும் நான் இங்கு குறிப்பிடாத சேவைகள் அதிகம் உண்டு. தேவகற்பனை, திருச்சபையின் கற்பனை என்பனவற்றில் அசட்டையாய் இருந்ததற்கும் மற்றும் மறைமுக சேவைகளுக்கும் நன்றி. வாழப்பிறந்த வாலிபர்குலமே! வயதுவந்த பெரியோரே!! நவநாகரீக நங்கையரே!!! உங்கள் யாபேருக்கும் என் நன்றி! நன்றி!! நன்றி!!! சபாஷ்! போய்வருகிறேன்.

வணக்கம்.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

In the matter of the intestate estate of Santhiapillai Amirthanather of Mathakal.

Deceased.

Amirthanather Santhiapillai of Mathakal.

Petitioner.

No. 1086/Testy.

Vs.

Philippu Aseervathem of Mathakal.

Respondent.

This matter coming on for desposal before V. M. Coomaraswamy Esquire, Acting District Judge of Jaffna on the 17th day of January 1962 in the presence of Mr. S. Tirunavukkarasu Proctor for Petitioner and the affidavit and petition of the Petitioner dated 17th January 1962 having been read:

It is ordered that the Petitioner be and he is hereby declared entitled to have Letters of Administration over the estate of the deceased as son and heir and that such letters accordingly issued to him unless the Respondent abovenamed or any other person or persons interested shall on or before the 28th day of February 1962 appear before this Court and show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 17th day of January 1962.

Sgd. **C. Thanabalasingam,**
District Judge, Jaffna.

28-2-62. Time to show cause extended till 16-3-62.

Sgd. **V. M. Coomaraswamy,**
D. J.

16-3-62. Time to show cause is extended till 17th May 1962.

Sgd. **N. Sivagnanasundram,**
D. J.

### நன்றியறிதல்

யேசுவின் திருஇருதய இரக்கத்தினாலும், பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், கச்சைதீவு அர்ச். அர்தோனியார், குழந்தையேசுவின் அர்ச். சின்னத்திரேசம்மாள், அர்ச். நீற்றம்மாள் இவர்களின் வேண்டுதலினாலும் எனது பிள்ளைக்குப் பலமாதகாலமாக நீடித்திருந்த வயிற்றோட்டம் சௌக்கியமானது. இன்னும் இக்குழந்தைக்கிருக்கும் மற்றும்சுகவீனங்கள் நீங்கிப் பூரணசுகம்கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்குமாறு சுத்தவாளர்களை இரந்துமன்றாடி, நேர்த்தியின்படி காவலனில் பிரசுரிக்கிறேன்.

அ. சிங்கராயர்

சில்லாலை

## விற்பனைக்கு!

தபசுகாலத்துக்குரிய
**நிரூபங்களும்**
**சுவிசேஷங்களும்**
கிளேஸ் பேப்பர்—**2-00**
பைபிள் பேப்பர்—**2-25**

●

மூவர்ணப்பட அட்டையுடன்
அழகுற
அச்சேற்றப்பெற்ற
கைக்கடக்கமான புத்தகம்.
**சதாசகாய மாதாவைநோக்கி**
**நவதின வேண்டுதல்**
பிரதி விலை சதம் **20.**

●

**திவ்விய பூசையில்**
**நேர்முகமாய்ப் பங்குபற்றல்**
**வாசிப்பதற்கு இலகுவானமுறையில்**
**திருத்திஅமைக்கப்பெற்றுப்**
புதிய பதிப்பாக வெளிவந்துள்ளது.
பிரதி விலை சதம் **05.**

●

**வரப்பிரசாத நவநாள்**
பிரதி சதம் **5.**

●

**திருச்சபைப்**
பொதுச்சங்கத்தின் சித்திக்காக
இஸ்பிரீத்துசாந்து சருவேசுரனுக்கு
செபம்
பிரதி சதம் **3.**

●

திரு இருதயத்துக்கு
குடும்பங்களைக் காணிக்கையாக
**ஒப்புக்கொடுக்கும் செபம்**
பிரதி சதம் **3.**

●

நல்வாசகம்
பரம்பும்படியாகச்
**செபம்**
பிரதி சதம் **3.**

●

மனுக்குலத்தை
யேசுவின் திருஇருதயத்திற்கு
**ஒப்புக்கொடுக்கும் செபம்**
பிரதி சதம் **2.**

●

**தமிழ் உறுப்புப் புத்தகம்**

| | | |
|---|---|---|
| 2-ந் தரம் | — | 30 சதம் |
| 3-ந் தரம் | — | 30 சதம் |
| 4-ந் தரம் | — | 30 சதம் |
| 5-ந் தரம் | — | 30 சதம் |

மற்றும் விபரங்களுக்கு

**அதிபர்,**
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

'என்ற முகவரிக்கு எழுதுங்கள்.

## இரண்டிலொரு பதவி

மாநகரசபை, நகரசபை, பட்டினசபை, கிராமச்சங்கமுதலாம் தலதாபனங்களில் அங்கம்வகிக்கும் ஆசிரியர்கள் ஒன்றில் தலதாபனங்களின் அங்கத்துவபதவியை அன்றேல் ஆசிரியபதவியை இராசினாமாச் செய்யவேண்டுமென்பதைத்தெரிவிக்கும் சுற்றறிக்கை ஒன்றைக் கல்விப்பகுதி சகலஆசிரியர்களுக்கும் அனுப்பியிருக்கிறது. பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டபின் அரசாங்கம் ஊழியர்களைப்போலவே ஆசிரியர்களும் அரசியலில் கலந்துகொள்ள லாகாதென்றும், ஏற்கனவே அரசியலில்கலந்து மாநகரசபைகள் ஆதியவற்றில் அங்கம் வகிக்கும் ஆசிரியர்கள் தொடர்ந்து ஆசிரியர்களாக இருக்கவிரும்பினால் அங்கத்துவபதவியை – அன்றேல் தலதாபனங்களிலே தொடர்ந்து அங்கத்துவம் விரும்பினால் ஆசிரியபதவியை இராசினாமாச்செய்ய வேண்டுமென்றும் அச்சுற்றறிக்கை கூறுகின்றது. ஆசிரியர்களாகக் கடமையாற்றும் பாராளுமன்றப் பிரதிநிதிகளும் ஆசிரியபதவிகளை இராசினாமாச் செய்யவேண்டும்.

### புத்தகுரு காரணம் கூறுகிறார்

"சாதி, சமயம், இனமென்ற பல அடிப்படைகளிலே தற்பொழுது இந்த நாடு பிளவுபட்டுப் பிரிந்திருப்பதால் தான் முன்னேற்றமடைவதற்குப்பதில் படிப்படியாகப் பின்னோக்கிச் செல்லுகின்றது; தற்பொழுதுள்ள நிலைமை விரைவிலே மாறாவிடில் இந்தநாடு மிகமோசமடைந்துவிடும்" என்று அம்பலாங்கொடையிலே சென்றபுதன் கிழமை நடைபெற்ற கூட்டம்ஒன்றில் கனம். பண்டிதகானேவித்த சுவர்ணவன்ச மகாதேரோஎனும் பெரியபுத்தகுரு பேசியிருக்கின்றார்.

● சந்திரனில்போய் வெற்றிகரமாக இறங்குவதில் ருஷியர்களை அமெரிக்கா தோற்கடித்து விடுமெனத் தாம்நம்புவதாக அமெரிக்க ஆகாயகமன–வானவெளி நிர்வாகத்தலைவரான திரு. ஜேம்ஸ் வெப் சமீபத்தில் தெரிவித்திருக்கின்றார்.

"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1225**

காரைநகர் மேற்கு
1. சண்முகம் வேலுப்பிள்ளையும்,
2. பெண் மீனாட்சிப்பிள்ளையும் இருவரும்.
நாகேசு கணேசபிள்ளை
காரைநகர் மேற்கு — பிரதிநிதி
— வழக்காளி

எதிராக

காரைநகர்மேற்கு
1. வேலுப்பிள்ளை குமாரசாமி,
2. வேலுப்பிள்ளை கைம்பெண் சின்னாச்சிப்பிள்ளை இருவரும்
காரைநகர் கிழக்கு
3. V. கார்த்திகேசு கந்தையா,
4. கந்தையா சிவஞானசுந்தரம் இருவரும்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1225-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1962-ம் ஆண்டு சித்திரை மீ 21-ம் உ (21-4-62) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 3965-42-ம், இதற்குத் தீர்வை ரூபா 3,000-க்கு 1-9-56 திகதி தொடக்கம்

"செபமாலை செபிக்கும் சேனை ஒன்றை நமக்குக் கொடுங்கள்; நாம் உலகத்தையே வெற்றிகொள்வோம்.
11-ம் பத்திநாதபாப்பரசர்

28-5-57 வரை 100-க்கு 7 வீத வட்டியும். பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு 291-50.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக்கோயிற்பற்று தனகோடை — "வியாவில்" பாப்பு நிலலாச்சம் 16உம், வீடும், கிணறும், பனைகளும், மற்றும் பயிர்களும். இதற்கு எல்லை: கிழக்கு — ரோட்டு. வடக்கு — நாகேசு பெண் தில்லைநாயகத்திற்குரிய ஆதனம். மேற்கு—ஆறுமுகம் பெண் தெய்வானைக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனங்கள். தெற்கு—நவசிவாயம் பெண் நாகம்மாவுக்கும். பொன்னையா பெண் முத்துப்பிள்ளைக்கும் உரிய ஆதனங்கள் இவ அடங்கலும். பதிவு இலக்கம்: C $\frac{290}{222}$

**சி. செ. மாரிமுத்து,**

கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
விதானைவளவு, சித்தன்கேணி,
1-3-62.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க செய்திகள்

## மதச் சீர்திருத்தத்தின்பின் முதல் சந்நியாச மடம்

டென்மார்க்கில் ஓர்ட்ரூப் எனுமிடத்தில் சாமிநாதர் சபைச் சந்நியாச ஆச்சிரமமொன்றை ஆரம்பித்திருக்கிறார் சுகிர் ஆண்டகை. 1953-ம் ஆண்டிலிருந்து ஷை சபைக்குச் சேர்ந்த பிரான்சிய குருமார் அர்ச். அந்திரேஸ் பங்கில் திருவூழியம் நடாத்திவந்திருக்கின்றனர். அதற்குமுன் ஜேர்மன் யேசு சபையினர் திருத்தொண்டாற்றினர்.

இம் மடத்திலுள்ள நூல்நிலையம் பொதுமக்களின் உபயோகத்துக்கும் விடப்படும்.

* * *

## அர்ச்சியசிஷ்ட பட்டத்தை எதிர்பார்ப்பவர்கள்

திருச்சடங்குகளின் சங்கம் 2,270 பேருடைய அர்ச்சியசிஷ்டபட்ட ஆராய்ச்சியை நடாத்திவருகின்றது. இவர்களுள் மூன்று அரசிகளும், ஐந்து பாப்புமாரும், 13 கருதினல்மாரும் உளர்.

ஸ்பானிய தேசத்தவரும், இங்கிலாந்தில் வளர்ந்து, அர்ச். 10-ம் பத்திநாதருக்கு அரச காரியதரிசியாயிருந்தவருமான கருதினல் மெறி டெல் வல் என்பாரும் ஒருவர். "மூன்ஸ்ரர் சிங்கம்" எனப் புகழ்நாமம் பெற்ற கருதினல் பொன் கேலனும் உண்டு.

போலாந்தில் 15-ம் நூற்றுண்டில் அரசியாயிருந்த ஹெட்விக், சவோயினளான மறியா கிறிஸ்தின, சார்டினியாவின் மறியா குளோரில்ட் ஆகிய மூவருமே அரசிகளாவர்.

5-ம் இன்னசென்ற், 11-ம் இன்னசென்ற், 10-ம் கிறகோரியார், 13-ம் ஆசீர்வாதப்பர், 9-ம் பத்திநாதர் ஆகியோரே பாப்புமாராவர்.

1588-ம் ஆண்டு ஏற்பட்ட இச்சங்கம் 155 அர்ச்சியசிஷ்டருடையவும், 116 முத்திப்பேறுபெற்றோருடையவும் ஆராய்ச்சிகளைச் சித்திகரமாய் முடித்திருக்கிறது.

* * *

## பன்னிரண்டுபேர் கொண்ட குடும்பத்தின் தொண்டு

கென்ரக்கியிலுள்ள தமது 103 ஏக்கர் பண்ணையில் நடாத்திய சொகுசான வாழ்க்கையைவிட்டு, திரு. யேம்ஸ் கிறேனும், அவர் மனைவியும், 10 பிள்ளைகளும் இல்லறத் தொண்டராக அலஸ்காவில் பணியாற்றுவர். அங்கு கொப்பர் கணவாயில் யேசுசபையார் திருத்தொண்டாற்றும் பகுதியில் கிறேன் குடும்பத்தவர்கள் வேதனம் இன்றிச் சீவிப்பர்.

"கடவுள் எமக்குமிகுதியாய்த் தந்தபடியால் நாம் அவருக்குத் திருப்பிக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளோம்", என்றார் கட்டிட ஒப்பந்தகாரர் கிறேன். "பல ஆண்டுகளாக ஜிம்மும் நானும் திருத்தொண்டாற்ற ஆசைகொண்டிருந்தோம். 15 கண்மணிகளைக் கடவுள் தந்ததினுல் அவ்வாஞ்சையை 1960 வரை ஒத்திவைக்கவேண்டியதாயிற்று" என்கிறுள் திருமதி கிறேன்.

1960-ம் ஆண்டு வைகாசியில் எனது 15 வது குழந்தை இறந்தது. செபமும், கடவுள்தந்த திடதேகமும் என்னைப் பிழைக்கவைத்தன. இப்பேருபகாரத்திற்கும், சீவந்தராயிருக்கும் எமது 10 அன்புக் குழந்தைகளுக்குமாக நாம் இப்படித்தான் கடவுளுக்கு நன்றிசெலுத்தமுடியும்.

கிறேன் தம்பதிகள் தமது பண்ணையையும் வீட்டுத் தளபாடங்களையும் விற்றுவிட்டு, லொறி ஒன்றும், கார் ஒன்றும், 45 அடிக் கூடாரமொன்றும், இயந்திரக் கலப்பை ஒன்றுங்கொண்டு செல்லுவர்.

கொப்பர்கணவாயில் பழையகோவில் ஒன்றில் வசிப்பர். இவர்கள் தண்ணீருக்கு மூன்றுமைல் தூரத்திற்குச் செல்லவேண்டும். திரு. கிறேன் கோயில்கட்டிட வேலைசெய்வார். மனைவியும் மக்களும் செவ்விந்தியருடனும், எஸ்கிமோவருடனும் வாழ்ந்து கிறிஸ்துவ குடும்பவாழ்வின் எடுத்துக்காட்டாய் வாழத் தெண்டிப்பர். தாம் நடாத்தவிருக்கும் வாழ்க்கை எத்தன்மையானது என இவர்களுக்கு ஓரளவு விளங்கும். ஏனெனில், 1959 இல் அலஸ்காவில் சிலவாரங்கள் தங்கியிருந்திருக்கின்றனர்.

* * *

## உணவற்றோருக்கு உதவி

கிறேயில் சங்கத்தார் இவ்வாண்டு நடாத்தும் தபசுகால இயக்கம் உணவுப்பசி, கடவுட்பசி ஆகிய இரண்டையும் சார்ந்தது.

1-வது இத்தபசுகாலத்தில் வெள்ளிதோறும் ஒருவேளை உணவிற்குச் செலவழிப்பதில் அரைவாசியையே செலவிடுமாறு கேட்கப்படுகின்றனர். இந்த ஒருவேளை உணவு பருகும்படியானதாயிருக்கும். மிச்சம்பிடித்த பணம் கிறேயில் சங்கத்துக்கு அனுப்பப்பட்டு, பின் ஒக்ஸ்போர்ட் உணவுப்பஞ்ச நிவாரண சங்கத்துக்கு அனுப்பப்படும்.

2-வது அசனத்துக்குமுன் பின்வருமாறு செபிப்பர்: "கர்த்தாவே எம்மை ஆசீர்வதியும். இவ்வுணவை ஆசீர்வதியும். இதைச் சமைத்தவரை ஆசீர்வதியும். மேலும் பசியாயிருப்பவர்களுக்கு உணவளித்தருளும்."

3-வது நாள்தோறும் இத்தபசுகாலத்தில், உலகமக்கள் கடவுள்மட்டில் கொள்ளும் ஆவல் பூர்த்தியாக மன்றுடுவர்.

"கர்த்தரே நீரே எம் கடவுள்; உம்மையே ஆசித்தேன்", என்னும் செபம் குறிப்பிடப்படுகிறது. குடும்பங்களும் இளைஞர் சங்கங்களும் இவ்வியக்கத்தில் ஈடுபடுவர். பலகலாசாலைகளும் சேர்ந்துகொள்ளும்.

* * *

## 400 ஆண்டுகளுக்குப்பின் பிரபுக்கள் சபையில் மீண்டும் கேட்கப்பட்ட குரல்

400 ஆண்டுகளுக்குப்பின் முதன்முறையாக அர்ச். ஆசீர்வாதப்பர் சபையைச் சேர்ந்த ஒரு துறவி இங்கிலாந்து தேசத்தின் பிரபுக்கள் சபைக்கு சென்றமாத இறுதியில் சமுகமளித்துச் சொற்பொழிவாற்றினர். இளைஞர் சேவைபற்றியே அவர் தமது முதற் சொற்பொழிவை நிகழ்த்தினர். அன்னார் ஹரோடனின் வோ பிரபு ஆவர். அவருடைய பெயர்: வொறிங்டனிலுள்ள அர்ச். அல்பன் மடத்தைச் சேர்ந்த வண. கபிரியேல் கில்பி, ஓ. எஸ். பி. சுவாமிகள். அவர் தமது சொற்பொழிவில் கூறியதாவது: "அர்ச். ஆசீர்வாதப்பர் சபையைச் சேர்ந்த ஒரு துறவி கடைசிமுறையாக உங்கள் சபையில் சொற்பொழிவாற்றியது 1559-ம் ஆண்டில் என்று நம்புகிறேன். அதற்குப்பின் அவர் விஸ்பெக் கோட்டையில் சிறையிலிடப்பட்டார்.

"சாதாரண வாழ்க்கையில் நான் ஓர் உதவிக் குரவர். விசாரணைப் பங்குகளில் உதவிக் குருக்களுக்குக் கஷ்டமான கடமைகள் கொடுக்கப்படுவது சகஜம். சகல கடமைகளிலும் மிகக் கடினமானது இளைஞர் மன்றங்களை நடத்துவதே. நான் கடந்த பத்து வருடங்களாக இரண்டு இடங்களில் இத்துறையில் வெற்றிகரமாகப் பயிற்சி பெற்றுள்ளேன். அதற்குமுன் 15 ஆண்டுகளாகப் பொதுக்கல்வி நிலையங்களில் இளைஞர்களுக்குக் கல்வியூட்டியுள்ளேன்.

"விசாரணைப்பங்கின் இளைஞர்மன்றத்தை நான் பொறுப்பேற்றதிலிருந்தே, அம்மன்றத்தின் உறுப்பினருக்கும் பொதுக்கல்வி நிலையங்களின் மாணவர்களுக்கு மிடையிலுள்ள பெரும் வித்தியாசத்தை அவதானித்தேன். அவர்களிடத்தில் தன்னம்பிக்கை, பொறுப்புணர்ச்சி, விடயங்களைத் தொடங்கும் ஆற்றல், தலைமையைத் தகுந்த முறையில் உபயோகித்தல் முதலிய குணங்கள் மிகக்குறைவாகக் காணப்பட்டன. இன்னும் மூதியோர்மேல் அவர்கட்குக்கூடிய அவநம்பிக்கையும் காணப்பட்டது.

"இளைஞர்கள் வீதிகளின் மூலைமுடக்குகளிலும்; சந்திகோடிகளிலும் குண்டுகளால் சேதமுற்ற இடங்களிலுமிருந்து தகுதிவாய்ந்த நிலையங்களுக்குக் கவரப்படுவார்களாயின், அவர்களை தன்னம்பிக்கை, சுயமரியாதை, பொறுப்புணர்ச்சி, தலைமைவகிக்கும் தன்மை முதலிய குணங்களில் நற்பயிற்சியளிக்கலாமெனபதில் எவ்வித ஐயமுமில்லை" என்று கூறிமுடித்தார்.

லண்டன்மாநகரின் அங்கிளிக்கன் சபையின் மேற்றிராணியார் வோ பிரபுவின் சொற்பொழிவை, "400 ஆண்டுகளாக இச்சபையில் கேட்கப்படாத குரலொலி" என்று குறிப்பிட்டு வரவேற்றார்.

* * *

## உகந்தாதேச வேதசாட்சிகளுடன் மரிக்கத்தவறிய மாது காலமானுள்

1886-ம் ஆண்டு உகந்தா தேசத்தில் 20 கத்தோலிக்கர் வேதசாட்சிகளாகக் கொல்லப்பட்டபொழுது, எதிர்பாராத விதமாய் மரணத்துக்குத் தப்பின கத்தோலிக்க மாது விக்ரோறியா திபக்வெமசாமா தனது 100-வது வயதில் கிபிம்பா என்ற இடத்தில் அண்மையில் காலமானுள்.

புகண்டாவின் அரசனுன மிவங்கா 1886-ம் ஆண்டு கிறிஸ்தவர்களுக்கு எதிராக வேதகலாபனை ஒன்றைத் தொடங்கினுன். வேதசாட்சிகளாய் மரித்த 20 பேருடன் பிரதம நீதிபதியான ஸ்ரனிஸ்லாஸ் மக்வானுவின் புதல்வியான விக்ரோறியாவும் கைதுசெய்யப்பட்டு, தீக்கிரையாக்கப்பட வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்பட்டாள். ஆனுல், கடைசிநேரத்தில் மிவங்கா அரசனின் காவலாளன் ஒருவனுல் எதிர்பாராதவிதமாகத் தீயிலிருந்து காப்பாற்றப்பட்டாள். அப்போது அவளுக்கு வயது 25 ஆகும். ஏனைய இருபதுபேரும் சுட்டெரிக்கப்பட்டனர். இவர்களுக்குத் திருச்சபை முத்திப்பேறுபெற்ற பட்டம் அருளியுள்ளது. அதன்பின்பு, விக்ரோறியா அவர்களின் பத்திவணக்கத்தைத் தேசமெங்கும் பரப்பிவந்துள்ளாள்.

* * *

## குழந்தைகளுக்காகக் குடும்ப உபவாசம்

இங்கிலாந்திலுள்ள தேசிய கத்தோலிக்க மகளிர் சம்மேளனம் குடும்ப நோன்புநாள்ஒன்றைப் பங்குனிமாதத்தில் நடாத்தத் திட்டமிட்டிருக்கின்றது.

அத்தினத்தில் உபவாசத்தில் பங்குபற்றும் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரும் ஏதாவதொரு சுயமறுப்பு முயற்சிசெய்யக் கேட்கப்படுவர். சிறுவர் இனிப்புப் பண்டங்களைக்கைவிட, தந்தை சிகறட் பக்கட் ஒன்றையோ, பியர் குடிவகையையோ விட்டுவிட, தாய் செலவிற் குறைந்த ஒருநேரச் சாப்பாடு தயாரிப்பாள். இம்முறையில் சென்ற ஆண்டில் சேகரித்த 27,000 பவுணும் பிரி. மேற்கிந்திய தீவுகளில் ஒன்றான டொமினிக்காவிலுள்ள பாலயேசு போஷணை நிலையத்திற்கு அனுப்பப்பட்டது.

அங்கு தாய்மாரும் சமூகசேவையாளரும் போஷாக்குள்ள உணவு தயாரிக்கும் பயிற்சிபெற்றனர். சூறைக்காற்று, நெருப்பு ஆகியவற்றல் பாதிக்கப்படாத புதிய வைத்தியநிலையமும் கட்டப்பட்டது. இவ்வாண்டில்சேரும் பணம் இந்நிலையத்தின் சேவைகளை நிரந்தரமாக்க உபயோகிக்கப்படும்.

உலக உணவுத் தட்டுப்பாட்டை பங்கீடு, உற்பத்தி, கல்வி முறைகளால் போக்கலாம் என்பதற்கு இதுவோர் எடுத்துக்காட்டாகும்.

# பேசும் பேனு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பினர். வர்த்தகரோ ஓர் ஆன்மாவை இரட்சித்த மகிழ்ச்சியுடன் உயிர்நீத்தார். ஆமாம் நீங்களும் தயாராகவிருக்கின்றீர்களா?

## எட்டாவது வயதில்...

"மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியே, யேசுக்கிறிஸ்துநாதருக்கு என்னையே அர்ப்பணித்து விடுவதெனத் தீர்மானித்துவிட்டேன். எளவே எனது குழந்தைப்பராயத்தில் தாங்கள் தீர்மானித்த திருமணத்தில் ஈடுபடுதல் எனக்கொவ்வாதது. எனது பெற்றோரையும் என்னையும் ஆதரித்துக்காப்பாற்றிய தாங்கள் எனது எண்ணம் பூர்த்தியாவதற்கும் உதவுவீர்கள் என்பது திண்ணம். எனக்குரிய சொத்து சுதந்தரங்களைப் பகிர்ந்து ஏழைகட்கு அளித்துவிடுங்கள். அச்செயலால் என்னை மணந்துகொள்ள ஆசிப்பவர்கள் அவ்வெண்ணத்தை மாற்றிக்கொள்வர்."

தனது எட்டாவது வயதில் தியோடியஸ் சக்கரவர்த்திக்கு மேற்காணும் லிகிதத்தை வரைந்தாள் ஒருபுனிதை. செனட்டரான அவளது தந்தை மரிக்கும்போது குழந்தைப்பராயத்திலிருந்த இச்சிறுமியையும் தாயையும் தாபரிக்கும்பொறுப்பை சக்கரவர்த்தி எடுத்துக்கொண்டார். அச்சமயம் இச்சிறுமிக்குத் திருமணமும் நிச்சயிக்கப்பட்டது. தமதுபுதல்வி மணஞ்செய்துகொள்ளும் வயதெல்லையையடையுமுன்னர் அவள் இத்தொல்லைகளில் அலைக்கழிக்கப்படாதிருக்க விரும்பிய விதவையான அன்னை புதல்வியுடன் எகிப்துசென்று மடாதிபதிகள் சிலரின் கண்காணிப்பில் தன்நாட்களைக்கழித்தாள். அன்னை மரித்தபின்னரே சக்கரவர்த்தி திருமணத்துக்கான ஒழுங்குகளைச்செய்யத்தலைப்பட்டார். எனினும் மேற்காட்டிய லிகிதம் செனட்சபையின் அங்கீகாரத்தைப்பெற்றது.

தனது முப்பதாம்பராயத்திலேயே இறைவனடிசேர்ந்த இப்புனிதை அர்ச். இயூபரேசியா ஆவர்.

## செய்திகள்தெரிவிப்போர் கவனிக்குக!

எமது பத்திரிகைக்குக் கத்தோலிக்க செய்திகள் அனுப்புவோர், அவற்றைத் தங்கள் விசாரணைப் பங்குக் குரவருடைய அங்கிகாரத்துடன் அனுப்பவேண்டும். பங்குச் சுவாமியாருடைய அங்கிகாரம் பெருத செய்திகள் பிரசுரிக்கப்படமாட்டா.

—ஆசிரியர்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sunday March 25-1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org